# HISTORY OF CHINA AND JAPAN FORM 1894-1894-1970 C.E

## UNIT-I

### முதல் சீன-ஜப்பானியப் போர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிழக்காசியாவின் இரு நாடுகளான சீனாவும் ஜப்பானும் ஐரோப்பிய வல்லரசுகளால் வலுக்கட்டாயமாக வெளியார் வாணிபத்திற்கு திறந்தவிடப்பட்டன. இரு நாடுகளிலும் மேற்கத்தியப் பண்பாடு. கல்வி, தொழில் நுட்பம் ஆகியவை தீவிரமாகப் பரவின. ஆனால் இன்னமும் மேற்கத்திய அறிவியல் பண்பாட்டை வெறுப்புடன் நோக்கியபோது ஜப்பான் அதனை ஆர்வத்துடன் பின்பற்றியது. சீனர்கள் கண்ணோட்டத்தில் ஜப்பான் கிழக்கத்திய கலாச்சாரத்திற்கு துரோகம் இழைத்த நாடாக காட்சியளித்தது. இன்னமும் பண்டைய கலாச்சாரப் பெருமையைக் கைவிட மனமின்றி காலமாறுதல்களுக்கேற்ற அரசியல் சமூக பொருளியல் மாற்றங்களை நிறைவேற்ற விருப்பமின்றி சீனா தனது பழைய கொள்கைகளையே பின்பற்றிய போது ஜப்பான், என்றும் மேற்கத்திய அறிவியல் தொழில்நுட்ப பண்பாடுதான் தனது முன்னேற்றத்திற்கு உகந்தது என என்று கருதியதோ அன்றே அவற்றை தீவிரமாகப் பின்பற்றத் தொடங்கியது. இவ்வாறு இருமாறுபட்ட கொள்கைகளின் பிரதிநிதகளாய் நின்ற இருநாடுகளிடையெ காணப்பட்ட கருத்து வேறுபாடுகள் நாளடைவில் பரஸ்பரம், அச்சம், பொறாமை ஆகியவற்றைக் கிளறி மோதலுக்கு வழிவகுத்தன. **முதல் சீன- ஜப்பானியப் போர்**.

**தொடக்கால சீன- ஜப்பானிய உறவுகள்:**

1867-ம் ஆண்டு ‘‘மெய்ஜி மறுமலர்ச்சி” ஜப்பானிய வரலாற்றின் திருப்புமுனையாகும். அதன் மூலம் ஜப்பான் ஒரு நவீன முற்போக்கு நாடாக எழுச்சியுற்றது. எனவே சீனாவில் மேற்கத்திய நாடுகளைப் போல் வணிகச் சலுகைகள் பெற விரும்பியது. ஆனால் இன்னுமும் ஜப்பானை மலிவாக எடைபோட்ட சீனா அதற்குத் தயங்கியது. எனினும் 1871-ல் ஜப்பான் அமைச்சர் **கவுண்ட் இடோவும்** (Count ito) சீன ராஜதந்திரி **லி ஹங் சங்கும்** ஒரு நட்புறவு உடன்படிக்கை செய்து கொண்டனர்.

**லூச்சு தீவு சிக்கல்:**

ரியூக்யூ (Ryukyu) எனப்பட்ட லூச்சுத் தீவுகள் ஜப்பானுக்கு தெற்கே அமைந்துள்ளவை. அத்தீவுகள் மீது சீனாவும் ஜப்பானும் நீண்டகாலமாகவே உரிமை பாராட்டி வந்தன. மெய்ஜி மறுமலர்ச்சிக்குப் பின் ஜப்பான் அவற்றின் மீது தன் மேலாண்மையை நிலைநாட்ட எண்ணியது. 1879-ல் ஜப்பான் திடீரென தன் படைகளை அனுப்பி அத்தீவுகளை ஆக்கிரமித்துக் கொண்டது.

**கொரியா சிக்கல்:-**

கொரியாவின் வரலாறு அதன் புவியியல் அமைவிடத்தால் நிர்ணயிக்கப்பட்டது. தனது ஆசியக் கண்டத்து திட்டங்களுக்கு நுழைவாயிலாக கொரியாவை ஜப்பான் கருதியது. புவியியல் ரீதியான அதன் அமைவிடம் காரணமாக கொரியாவின் எதிர்காலம் அண்மையிலுள்ள சீனா ஜப்பான் ஆகிய இரு நாடுகளின் உறவோடு பின்னிப் பிணைந்துள்ளது.

**ஜப்பானின் கொரியாக் கொள்கை** :

ஜப்பான் கொரியாக் கொள்கை **மூன்று கருத்துக்களை** அடிப்படையாகக் கொண்டிருந்தது அவை.

i) வலிமையற்ற கொரியா வலிமைமிகு வல்லரசு ஒன்றின் ஆதிக்கத்தின் கீழ் வரும் அபாயம் இருக்கிறது. அப்படி பகை உணர்வுள்ள வல்லரசின் ஆதிக்கத்தின் கீழ் வந்தால் அது ஜப்பானின் பாதுகாப்பிற்கு ஆபத்து குறிப்பாக அங்கு ரஷியாவின் ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டால் ஜப்பானின் பாதுகாப்புக்கு ஆபத்தானது என எண்ணியது.

ii) மெய்ஜி மறுமலர்ச்சிக்குப்பின் ஜப்பானிய அரசியல்வாதிகளிடையே மேற்கத்திய ஏகாதிபத்திய உணர்வும் கூடவே வளர்ந்து வந்தது. அதனை நிறைவேற்ற ஆசியாக் கண்டப்பகுதிக்கு செல்லும் "படிக்கட்டாக கொரியா பயன்படும்'' என்று எதிர்பார்த்தது.

iii) தனது வளர்ந்து வரும் ஆலைத் தொழிலுக்கு மூலப் பொருட்களை வழங்கி உற்பத்திப் பொருட்களை வாங்கும் சந்தையாக கொரியாவைப் பயன்படுத்தலாம் என்ற நப்பாசையும் இருந்தது. அதன் விளைவாக 1876-ல் கொரியாவுடன் **கிங்வா** (Kingwa) உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி **மூன்று துறைமுகங்கள்** ஜப்பானுக்கு திறந்துவிடப்பட்டதுடன் அதிகப்படியான ஆதிக்க உரிமையும் (Extra Territorial Rights) பெற்றது.

**சீனாவின் எதிர் நடவடிக்கை:-**

ஜப்பான் மட்டும் கொரியாவில் வணிக அரசியல் சலுகைகள் பெறுவதை சீனா விரும்பவில்லை. எனவே சீன வெளியுறவு அமைச்சர் உலி ஹங் சங் ஜப்பானைப் போன்று பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் வணிக அரசியல் உரிமை வழங்குமாறு ஆலோசனை நல்கினார். அதன்படி 1886க்குள் இங்கிலாந்து, ரஷியா, ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு கொரியா வணிக அரசியல் உரிமைகளை வழங்கியது. அத்துடன் லி கொரியாவில் ஜப்பானிய நடவடிக்கைகளுக்கு எதிர் நடவடிக்கை எடுக்க யுவான் ஷி கே என்பாரை சீனப் பேரரசரின் தூதராக நியமித்தார்.

**லி-இடோ ஒப்பந்தம் (1885):**

எனினும் இருதரப்பாரும் அச்சமயத்தில் கொரியா பிரச்சனையை போர்முனையில் தீர்த்துக் கொள்ள தயாராய் இல்லததால் அதனை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க இணங்கினர். அதனால் ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் **கவுண்ட் இடோ** சீன வெளியுறவு அமைச்சர் **லி ஹங் சங்கை** டியன்சினில் சந்தித்தார். இவ்விரு ராஜதந்திரிகளும் 1871ல் சந்தித்து பேசினர்.

பேச்சு வார்த்தையின் இறுதியில் கையெழுத்தான ஒப்பந்த **நிபந்தனைகளாவன:**

i) சீனாவும் ஜப்பானும் தங்கள் படைகளை கொரியாவிலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்

ii) ஏதாவது ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் மீண்டும் படையனுப்ப விரும்பினால் அதனை அடுத்தவருக்கு தெரிவித்து விட்டு அனுப்பலாம்

iii) கொரியாப்படை சீனா ஜப்பான் நீங்கலாக வேறொரு வெளிநாட்டு கண்காணிப்பின் கீழ் சீரமைக்கப்பட வேண்டும்

iv) இரு நாடுகளும் கொரியாவின் உள்நாட்டு விவாகரங்களில் தலையிடக்கூடாது

**போரை விரைவுபடுத்திய நிகழ்ச்சிகள்:**

**உடனடிக்காரணம்:**

**டோங்காக் கலகம்** டோங்காக் என்றால் "கிழக்கத்திய கல்வி" கழகம் என்று பொருள். ஆனால் உண்மையில் இது பழமைவாத சமயப்பிரிவு கிழக்கத்திய பாரம்பரிய சமயங்களான கன்பூசியஸ் தாவோயிசம் பௌத்தம் ஆகியவற்றில் தீவிரப் பற்று கொண்டிருந்தது. எனவே மேற்கத்திய பண்பாட்டிற்கு எதிராயிருந்தது. பின்னர் அது ஜப்பானியர்களுக்கெதிரான கலகமாக மாறியது.அக்கலகத்தை அடக்க கொரிய அரசு சீனாவின் படை உதவியை நாடியது, சீனாவும் 1885ன் ஒப்பந்தப்படி ஜப்பானுக்கு அறிவித்துவிட்டு படை அனுப்பியது. கலகம் அடக்கப்பட்ட பின்னரும் சீனாப்படையும், ஜப்பானியப் படையும் கொரியா மண்ணில் இருந்தனர். கொரியா தன் இறையாண்மைக்கு கீழ்ப்பட்டு திரை செலுத்தும் நாடு என்று கருதிய சீனா தன் படைகளை திரும்பப் பெற மறுத்தது. கொரியா ஒரு சுதந்திர நாடு என்று கருதிய ஜப்பான் அதனை எதிர்த்தது. இதனால் போர் தொடங்கியது.

**சீனா ஜப்பானிய போர் (1894-95):**

கொரியாவை ஆக்கிரமிக்கும் நோக்கம் தனக்கில்லையென்றும், அதன் சுதந்திரத்தை உறுதி செய்து வெளிநாட்டு வாணிபத்திற்கு அதனை திறப்பதுமான தனது நோக்கமென்றும் அறிவித்தது. மேற்கு நாடுகளை திருப்பதிப்படுத்த ஜப்பான் இவ்வாறு அறிவித்தது. இப்போரில் வெற்றி ஜப்பான் படை ஷாண்டுங் தீபகற்பத்திலுள்ள **வெய் ஹய் வெய்** துறைமுகத்தை தாக்கி கைப்பற்றியது. எல்லாத் திசையிலும் தோல்வியைத் தழுவிய சீனா அமைதியை நாடியது. எனவே 1895-ல் போர் நிறுத்தம் ஏற்பட்டு **ஷி மனோசாகியில்** அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கியது.

**ஷி மனோ சாகி உடன்படிக்கை 1895:**

1. கொரியா ஒரு சுதந்திர நாடு என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது
2. பர்மோசா தீவு பெஸ்காடோர்ஸ் தீவுகள் லியோடுங் தீபகற்பம் ஆகியவற்றை சீனா ஜப்பானுக்கு அளித்தது.

3.புதிதாக 4 துறைமுகங்களை சீனா வெளியார் வார்த்தகத்திற்கு திறந்துவிட வேண்டும்

4. 1896- ல் சீனாவுடன் பீகிங்கில் செய்த வணிக உடன்படிக்கைப்படி ஜப்பானிய உற்பத்திப் பொருட்கள் சீனாவில் எல்லா இடங்களிலும் தடையின்றி விற்க அனுமதி அளிக்கப்பட்டதோடு அனைத்து வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டது.

**சீனாவின் தோல்விக்கான காரணங்கள்:**

மேலைநாட்டுப் பாணியில் பயிற்சி பெற்ற ஜப்பானிய வீரர்கள் நாட்டுப்பற்றுடன் கட்டுப்பாட்டுடன் போரிட்டபோது, தகுந்த பயிற்சியும் படைக்கலனும் இல்லாமல் போரிட்ட சீன வீரர்கள் தோல்வியுற்றனர். மேலும் யாங்டிசி நதிக்கு தெற்கில் வாழ்ந்த சீனர்கள் இப்போரில்

ஆர்வம் காட்டவில்லை. அப்போரினை லி ஹங் சங்கின் சொந்தப் பிரச்சினை என்றே மக்கள் கருதினர். தாவஜர் பேரரசி ஷூ ஷி கப்பற்படையை சீரமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை தமது கோடைகால அரண்மனைப் புதுப்பிக்க செலவிட்டாள்.

**சீனாவில் சீர்திருத்த இயக்கம்:-**

ஜப்பானின் இந்த வெற்றிக்கு காரணம் அந்நாடு தனது படை மற்றும் தொழிற் துறைகளை மேற்கத்திய பாணியில் மாற்றியமைத்ததுமான என்று சீன இளைஞர்கள் கருதினர். சீனாவிலும் அது போன்று மேற்கத்திய சீர்திருத்தங்களை புகுத்தவேண்டும் என்ற கருத்து வலுப்பட்டது.

**உள்நாட்டுத் தொழில்கள் அழிவு:-**

போருக்குப் பின் செய்து கொண்ட ஒப்பந்தப்படி சீனாவில் எப்பகுதியிலும் தொழில் தொடங்க ஜப்பான் அனுமதிக்கப்பட்டது. இச்சலுகை அனைத்து உடன்படிக்கை நாடுகளுக்கும் அளிக்கப்பட்டது. எனவே வெளிநாட்டினர் சீனாவிலே தங்கள் ஆலைகளை நிறுவி சீன மூலப் பொருட்களைப் பயன்படுத்தி தங்கள் தொழில் நுட்பத் திறன் மூலம் உற்பத்தியை அதிகரித்தனர். இதன் மூலம் சீனாவில் மேற்கத்திய பொருளியல் ஏகாதிபத்தியம் நிலைநாட்டப்பட்டது. உள்நாட்டு தொழில்கள் நசிந்து போயின. மேற்கத்திய பொருளியல் ஏகாதிபத்தியம் நிலைநாட்டப்பட்டது. உள்நாட்டு தொழில்கள் நசிந்துபோயின.

## நூறுநாள் சீர்திருத்தம் (1898)

சீன அரசியல் பொருளியல் சமூக நிறுவனங்கள் மீதான மேற்கத்திய தாக்கத்திற்கு சீனாவின் பதில்தான் நூறுநாள் சீர்திருத்த இயக்கம். மேற்கத்தியர்களின் முன்னேற்றம் போர்க்கள வெற்றிகள் ஆகியவற்றின் இரகசியம் அவர்களது அறிவியல் தொழில் நுட்பத்திறன்கள் தாம் என கற்றறிந்த சீனர்கள் உணர்ந்திருந்தனர். எனவே சீன முன்னேற்றத்தின் திறவுகோலும் மேற்கத்திய தொழில் நுட்பத்திறனில்தான் இருக்கிறது என சீனர்கள் நினைத்தனர். சீன அரசியல் பொருளியல் தொழிலியல் அறிவியல் நிறுவனங்களை மேற்கத்திய பாணியில் மாற்றியமைக்க வகை செய்யும் சீர்திருத்தங்கள் தேவை என வலியுறுத்தத் தொடங்கினர். இரண்டாவது அபினிப் போருக்குப்பின் தோன்றிய சீர்திருத்த எண்ணங்கள் சீன-ஜப்பானிப் போருக்குப்பின் பெரும் இயக்கமாக வளர்ச்சியடைந்தது.

**சீர்திருத்த இயக்கம் தோன்றுவதற்கான சூழ்நிலை:**

**கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களின் பணி:**

சீனாவில் மேற்கத்திய பண்பாடு பற்றிய பொதுவான விழிப்புணர்வு ஏற்படுவதற்கு முக்கிய தூண்டு கோலாயிருந்தது கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள்தாம் சமயப் பற்றி பரப்புதல் தான் அவர்களது முதன்மைப் பணியாக இருந்த போதிலும் கல்வி மற்றும் சமூக முன்னேற்றம் போன்ற பணிகளிலும் ஈடுபட்டனர். அதன் பயனாக, பள்ளிகள் நிறுவினர்,

நூலகங்கள் நிறுவனர், செய்தித்தாட்கள் மற்றும் நூல்கள் வெளியிட்டனர், மேற்கத்திய நூற்களை மொழிபெயர்ப்புச் செய்தனர். இந்தப் பணிகள் காரணமாக அவர்களையறியாமலே மேற்கத்திய அறிவியில் சமூகக் கோட்பாடுகள் சீன சமூகத்தில் பரவ காரணமாயிருந்தனர். சீனர்களிடையே கிறிஸ்துவம் மற்றும் பொது அறிவு பற்றியவைகளைப் புகுத்துவமற்கு ஒரு அமைப்பினை நிறுவினர், அதன் மூலம் அரசியல் சமூக சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினர். இவ்வாறு சமயப்பரப்பாளர்கள் சீர்திருத்த இயக்கத்திற்கான பூர்வாங்கப் பணிகளைத் தொடங்கி வைத்தனர். உடன்படிக்கைத் துறைமுகங்கள் அனைத்தும் ஒரு மேற்கத்திய குடியேற்றங்களாக வளர்ச்சியடைந்தன. அவற்றின் மூலமாக சீனர்கள் மேற்கத்திய நாடுகளுடன் தொடர்பு கொண்டனர். மேலும் நூற்றுக்கணக்கான சீன மாணவர்கள் உயர் கல்விக்காக மேல் நாடு சென்று திரும்பினர். இவ்வாறு மேற்கத்திய நாடுகளுடன் தொடர்பு கொண்ட சீனர்கள் மேற்கத்திய அரசியல் அறிவியல் நிறுவனங்களை சீனாவிலும் புகுத்த எண்ணினர். அவர்கள் சீர்திருத்தங்களின் முன்னோடிகளாக விளங்கியதோடு சீர்திருத்தங்களுக்கான பூர்வாங்கப் பணிகளையும் தொடங்கி வைத்தனர். அவர்களுள் குறிப்பிடத்தவர் **காங்-யு-வை** ஆவார்.

**காங்-யு-வை:**

சீனாவில் தீவிர சீர்திருத்தங்களுக்கான அரும்பெரும் முயற்சி எடுத்தவர் காங் யு வை ஆவார். புதிய கன்பூசியஸ் கோட்பாட்டு அறிஞரான இவர் மேற்கத்திய முறையிலான அரசியல் சீர்திருத்தங்களில் அதிக ஆர்வம் காட்டினார் அதனை நிறைவேற்ற ஆக்கரீதியான பல நடவடிக்கைகளையும் எடுத்தார். முதலில், ''நவீன உரைநடை இயக்கத்தில்'' தொடர்பு கொண்டு அதன் மூலம் தம் கருத்துக்களைப் பரப்பினார்.

இரண்டாவது உலகளாவிய பொது நல நூல் வெளியீட்டில் தமது சீர்திருத்தக்கருத்தின் அடிப்படையில் கற்பனை உலகை உருவாக்கியருந்தார்.

மூன்றாவது ''ஆய்வுக் கழகங்கள்'' நிறுவினார். அக்கழகங்கள் சீர்திருத்தங்களின் கட்டாயத் தேவைப் பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். மேற்கத்திய அறிவியல் நூல்களை மொழிபெயர்த்தன செய்தித்தாள்கள் வெளியிட்டன. நூலகங்கள் நிறுவின.

நான்காவது 1898-ல் ''தேசிய பாதுகாப்பு கழகத்தை நிறுவினார்''. இது உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் மூலம் சீன மக்களின் சமயம், நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இதன் கிளைகள் நாடெங்கும் நிறுவப்பட்டன.

**சீர்திருத்தங்கள் பற்றி காங்- யு-வையின் கருத்துக்கள்:-**

காங்-யு-வையின் சீர்திருத்தங்களினால் கவரப்பட்ட பேரரசர் குவாங் - ஷுவும் அதற்கு இணங்கினார். அதன் பயனாக **1898 ஜுன் 11 ஆம் நாளிலிருந்து செப்டம்பர் 20 ஆம் நாள்** வரை சுமார் 100 நாட்கள் 48 சீர்திருத்த ஆணைகள் வெளியிடப்பட்டன. கல்வி, பொது நிர்வாகம், தொழிலியல், வேளாண்மை ஆகியவற்றை சீரமைப்பதாக அவை இருந்தன.

**கல்வி**

1) பீகிங்கில் ஒரு மைய பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. அது பேரரசின் பிற கல்வி நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது.

2) மாநிலத் தலைநகர்களில் கல்லூரிகளும், மாவட்டங்களில் உயர்நிலைப்பள்ளிகளும் நிறுவப்பட்டன.

3) அனைத்து அரசு உயர் அலுவலர்களும் ஏதாவது ஒரு கல்லூரியில் கல்வி பயில வகை செய்யப்பட்டது. அதன்மூலம் அவர்கள் ஆற்றல் திறன் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

4) மேற்கத்திய கொள்கைகள் அறிவியல் கண்ணோட்டங்களை சீனர்களிடம் புகுத்தும் வண்ணம் பிறமொழி நூற்கள் பல சீனமொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

5) அரசுப் பதவிக்கான போட்டித் தேர்வுகள் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டன. கன்பூசியஸ் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ‘‘எட்டுக்கால் கட்டுரை’’ அகற்றப்பட்டது.

6) மருத்துவ பள்ளிகள் திறக்கப்பட்டன

7) அதிகாரபூர்வமான செய்தித்தாள் வெளியிடப்பட்டது.

**II அரசு நிர்வாகம்:**

1) காலத்திற்கு உதவாத தேவையற்ற பல பதவிகள் ஒழிக்கப்பட்டன. பல ஆளுநர், தலைமை ஆளுநர் பதவிகள் ஒழிக்கப்பட்டன. பேரரசு போதனை, மேற்பார்வை நிறவனம், அரசு சடங்குமுறை சபை ஆகிய நிர்வாக அமைப்புகள் ஒழிக்கப்பட்டன.

2) சீர்திருத்தங்களில் நம்பிக்கையுள்ள முற்போக்காளர்கள் பலர் முக்கிய பதவிப் பொறுப்புக்களில அமர்த்தப்பட்டனர். சான்றாக, லியாங் சி சாவோ, லின் ஷு ஆகியவர்களை குறிப்பிடலாம்.

3) திறமையடன் இயக்கும் வண்ணம் நிர்வாக அமைப்புகள் எளியமையாக்கப்பட்டன.

4) அனைத்து அரசு அலுவலர்களும் பேரரசருக்கு விண்ணப்பம் அளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

**III தொழில் துறை:**

1) ரயில்பாதை அமைப்பு, வேளாண்மை, கைத்தொழில் வாணிபம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வேளாண்மைக் கழகம் நிறுவப்பட்டது.

2) புதிய மேற்கத்திய அறிவியல் தொழில் நுட்பங்கள் புகுத்தப்பட்டன.

**IV பிற சீர்திருத்தங்கள்:-**

1) கட்டாய படைப்பயிற்சி மூலம் தேசிய படை உருவாக ஏற்பாடு செய்யப்பட்டது.

2) நீதிமன்றச் சட்டங்கள் சீரமைக்கப்பட்டன. பதிப்புரிமை, பொருள் உற்பத்தி உரிமை போன்றவை பாதுகாக்கப்பட சட்டங்கள் இயற்றப்பட்டன.

3) உயர் அதிகாரிகள் வெளிநாடு சென்று அங்குள்ள நிர்வாக அமைப்புகளை அறிந்துவர ஏற்பாடு செய்யப்பட்டது.

4) ஆண்டு நிதி அறிக்கை தயாரிக்கப்பட்டது

5) பழமையான ஆறு நிர்வாக மன்றங்கள் கலைக்கப்பட்டு புதிய 12 மன்றங்கள் நிறவப்பட்டன.

**சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்பு**

இவ்வாறு அடுக்கடுக்காக சீர்திருத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது அதனால் பாதிக்கப்பட்ட சுயநலவாதிகளும், பழமையானவர்களும் அவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தங்களுடைய பாரம்பரிய உரிமைச் சலுகைகளைப் பாதுகாக்க கோடைகால அரண்மனையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த **தாவஜர் பேரரசி- ஷுஷி**யை நாடினார். பழமைப் பிரியரான அவருக்கும் இந்த சீர்திருத்தங்கள் பிடிக்கவில்லை. எனவே அவரும் பேரரசர் குவாங்-ஷு பிறப்பித்த சீர்திருத்த ஆணைகள் அனைத்தும் செல்லாது என அறிவித்தார். இவ்வாறு நூறு நாட்களுக்குள் சீர்திருத்த இயக்கம் இடையிலே நின்றுபோனது.

**தோல்விக்கான காரணங்கள்:-**

பேரரசர் குவாங்ஷு அரச தந்திரத்தில் அனுபவமற்றவர் உயரிய இலட்சியங்களைக் கொண்டிருந்தாலும் அவற்றை செயல்படுத்தும் மனோ உறுதியற்றவர். சீர்திருத்தங்கள் ஒரு சில கற்றறிந்த சீனத் தலைவர்களால்தான் ஆதரிக்கப்பட்டன. அடிமட்டத்து மக்களுக்கு அதுபற்றி அக்கறை இல்லாதிருந்து பிற்போக்கு சக்திகளான உயர் மஞ்சு அதிகார வக்கத்தினரின் எதிர்ப்புதான் சீர்திருத்த இயக்கத்தின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணம், சீர்திருத்தங்கள் தங்கள் அதிகாரம் அந்தஸ்து, செல்வாக்கு ஆகியவற்றை அழித்துவிடும் என்ற அச்சம் காரணமாக சுயநலத்தால் தூண்டப்பட்டு சீர்திருத்த இயக்கத்திற்கு எதிரான சதியில் ஈடுபட்டனர்.

**திறனாய்வு:-**

சீனாவில் முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய முட்டுக்கடை மஞ்சு மரபின் ஆட்சி என்ற உண்மைகளை உணர்ந்த முற்போக்காளர்கள் அம்மரபினை வீழ்த்தும் புரட்சித் திட்டங்கள் தீட்டத் தொடங்கினர். நூறு நாள் சீர்திருத்த இயக்கம் 1911-ஆம் ஆண்டு சீனப் புரட்சிக்கு தூண்டுகோலாக அமைந்துவிட்டது. சீர்திருத்தங்கள் தோல்வியுற்றதால் பிற்போக்கு சக்திகள் புத்துயிர் பெற்றன. அவைகள் சீர்திருத்தவாதிகள் மீது மட்டுமல்ல அவற்றிக்கு காரணமான வெளிநாட்டினர் மற்றும் கிறிஸ்தவர்கள் மீதும் வெறுப்பைப் உமிழ்ந்தன. அதன் விளைவுதான் 1900-ம் ஆண்டு பாக்சர் கலகம் எனலாம்.

## திறந்தவாயில் கொள்கை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சீனா தன்னுடைய கதவுகளை இறுக மூடிக்கொண்டு அயல்நாட்டவர்களின் தொடர்பிலிருந்து விடுபட்டு இருக்க விரும்பியது. அதே நூற்றாண்டின் முடிவில் அயல் நாட்டவர்கள் அங்கு புகலானார்கள். அவர்கள் அதன் கதவுகளை மற்றவர்களுக்கு மூடலானார்கள். அப்போது அமெரிக்கா மட்டும் அவ்வாறு கதவகளை மூடக்கூடாது, கதவுகளைத் திறக்க வேண்டும் என்று கூறியது. அனைத்து

நாடுகளின் வாணிபத்திற்கும் பயனபடவேண்டும் அதன்படி சீா்ன அனைவருக்கும் சமமாக சுரண்டுவதற்கு தன் கதவுகளைத் திறந்து விடவேண்டும் அதாவது சமமாக சலுகைகைள் அளிக்க வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து சுரண்டு மற்றவா்களைச் சுரண்டவிடு என்ற குறிக்கோளை இக்கொள்கை கொண்டுள்ளது என்பது புலனாகிறது.

**பங்கீட்டிலிருந்து சீனாவைக் காப்பாற்றிய சூழ்நிலைகள்:-**

1895- ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஷிமொனோசெகி உடன்படிக்கைக்குட் பிறகு ஐபோரப்பிய வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு சீனாவில் சலுகைளைப் பெற முற்பட்டன.

**திறந்த வாயில் கொள்கை அறிவிக்கப்பட்ட சூழ்நிலை:-**

சீன-ஜப்பானியப் போர் சீனாவின் ஒன்றுமில்லாத் தன்மையை வெளிப்படுத்தியது. எனவே ஐரோப்பிய வல்லரசுகள் சீனாவை பங்கிட்டுக் கொள்ள துணிந்தன. ஒப்பந்த நிபந்தனைகள் மூலம் சீனாவின் பல்வேறு பகுதிகளை கீழ்க்கண்டவாறு செல்வாக்கு மண்டலங்களாகப் பங்கிட்டுக் கொண்டன.

**மஞ்சூரியா- ரஷிய செல்லாக்கு மண்டலம், ஷாண்டுங் - ஜொ்மன் செல்வாக்கு மண்டலம், யாங்டிசி பள்ளத்தாக்கு - பிரிட்டன் செல்வாக்கு மண்டலம், தெற்கு சீனா- பிரெஞ்சு செல்வாக்கு மண்டலம், ∴பூக்கியன் மாநிலம் - ஜப்பான் செல்வாக்கு மண்டலம்**

அந்தந்த செல்வாக்கு மண்டலத்திற்குரிய வல்லரசிற்கு அங்கு இருப்புப்பாதை அமைத்தல் சுரங்கங்கள் தோண்டுதல், தொழில் தொடங்குதல் ஆகியவற்றில் முன்னுரிமை அளிக்கப்பட்டது. அம்மண்டலத்தில் பிற வல்லரசுகளுக்கு இத்தயை உரிமைகள் எதுவும் அளிக்கப்படமாட்டாது என சீனா உறுதி வழங்கியது. எனவே ஒவ்வொரு மண்டலமும் அந்தந்த வல்லரசின் காலனியாக மாறிக்கொண்டிருந்தது.

அப்போது 1898-ல் அமெரிக்கா ஸ்பெயினுடன் ஒரு போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. போரில் தோற்கடிக்கப்பட்ட ஸ்பெயின் பாரீஸ் ஒப்பந்தப்படி 1898 பிலிப்பைன்ஸ் தீவுகளை அமெரிக்காவிற்கு கொடுத்தது. மேலும் 1865 முதல் 1868 வரையிலான ஆண்டுகளில் அமெரிக்காவில் பெரும் மாற்றம் ஏற்பட்டு தொழில் வளமான நாடாக மாறியது . தங்கள் நாட்டின் பொருள் உற்பத்திக்கு அயல்நாடுகளில் சந்தையைப் பிடிக்க முற்பட்டது.

சீனாவை நோக்கித் திரும்பிய அமெரிக்காவிற்கு அதிா்ச்சி காத்திருந்தது. சீனா பல மண்டலங்களாகப் பகுக்கப்பட்டு அதன் வாயில்கள் பிற நாட்டினருக்கு பூட்டப்பட்டிருந்தன. அனைத்து மண்டலங்களிலும் அனைத்து நாடுகளுக்கும் பொருளியல் வாணிப செல்பாடுகளில் சமய வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என அமெரிக்கா விரும்பியது. அதன் காரணமாக அன்றைய அமெரிக்கா வெளியுறவுச் செயலா் ஜான் ஹே திறந்த வாயில் கொள்கையை அறிவித்தாா்.

**திறந்த வாயில் கொள்கை:**

1899 செப்டம்பர் 6ல் ஜான் ஹே பிரிட்டன், ஜெர்மன் ஆகிய வல்லரசுகளுக்கு அனுப்பிய குறிப்பில் தன் திறந்த வாயில் கொள்கையை வெளியிட்டிருந்தார்.

1) குறிப்பிட்டதொரு மண்டலத்தினுள் அமைந்துள்ள உடன்படிக்கை துறைமுகங்கள் நிர்வாகத்தில் அந்த மண்டலத்து வல்லரசு குறுக்கிடக்கூடாது அங்கு சீனாவுடன் ஏறகனவே செய்து கொண்ட உன்படிக்கை சலுகைகளை அனைத்து நாடுகளும் அனுபவிக்க அனுமதிக்க வேண்டும்

2) சீன சுங்க வரி நிர்வாகத்தில் குறுக்கிடக்கூடாது.

3) அப்பகுதியில் இருப்புப்பாதை கட்டணங்கள் துறைமுக கட்டனங்களுள் வேறுபாடு காட்டாது அனைவருக்கும் ஓரே மாதிரியான கட்டணங்கள் விதிக்கப்பட வேண்டும்.

4) சீனாவின் பிரதேச ஒருமைப்பாட்டை மதிக்க வேண்டும்

சுருங்கக்கூறின் திறந்வெளிக் கொள்கை சீனாவின் திறந்த வெளிச் சந்தைக்கு உத்தரவாதம் அளித்தது. அத்துடன் ல்லா நாடுகளுக்கும் ஓரே சீரான வலிக்கொள்கை பின்பற்றப்பட்டது. மேலை நாடுகள் பெற்ற சிறப்புச் சலுகைளில் நடுநிலையான தன்மையினைப் பெற அமெரிக்கா விரும்பியது. சீனாவில் பொருள்களை விற்பதில் மற்ற நாடுகளைப் போல அமெரிக்காவும் ஆர்வம் காட்டியது. அமெரிக்காவின் இந்த திறந்த வெளிக் கொள்கை தனக்குக்கூட பேராதிக்க ஆசை உண்டு என்பதையே காட்டுகிறது என ஓவன் வாட்டிமோர் என்பவர் பொருத்தமாகக் கூறியுள்ளார்.

**திறந்த வெளிக் கொள்கையின் விளைவுகள்:-**

1) இக்கோட்பாட்டை வல்லரசுகள் ஏற்றுக்கொண்டதால் சீனாவைப் பங்கீடு செய்வது தற்காலிகமாக தடுக்கப்பட்டது.

2) இதன் மூலம அமெரிக்காவானது சீனாவின் மேல் அதிக ஆர்வம் காட்டியது.

3) ஐரோப்பிய நாடுகளில் ஆக்கிரமிப்பு திட்டங்கள் தடுக்கப்பட்டன. சீனாவின் பிரதேச ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட்டது.

## பாக்சர் கலகம்(1900)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீனாவில் நிலை பரிதாபமாக இருந்தது. பெருமைமிகு தெய்வீகப் பேரரசு சிறுமைமிகு சிற்றரசு நிலைக்குத் தள்ளப்பட்டது. அதன் வளமான பகுதிகள் அந்நிய பொருளியல் ஆதிக்கத்தின்கீழ் சுரண்டப்பட்டன. வரலாற்றுச் சிறப்புமிகு கன்பூசியஸ் சமயம் மாற்றுச் சமையத்தாரால் எள்ளி நகையாடப்பட்டது.

இத்தகைய இழிநிலைக்கு காரணம் ஆற்றலற்ற மஞ்சு மரபினரின் ஆட்சிதான் எனவே அன்னியர், மாற்றுச் சமயத்தார் கிறிஸ்துவம் மஞ்சு மரபு ஆகியவற்றின் மீது ஆவேசங் கொண்டெழுந்தனர். இந்த மூன்றும் ஒழிந்தால்தான் பண்டைய மேன்மை நிலை எய்தும் என்ற முடிவிற்கு வந்தனர் அதன் விளைவுதான் பாக்சர் கலகம்.

**பாக்சர்களின் தோற்றம்**

சீனாவில் பல இரகசிய சங்கங்கள் பல்வேறு நோக்கங்களுடன் இயங்கின. இவற்றுள் ‘‘எட்டு வரைபட இயக்கம்’’ இந்த இயக்கத்திலிருந்து உருவானது ‘‘ஐ-ஹோ-சுவான்’’ என்ற அமைப்பாகும். இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பொதுவாக அன்னிய மற்றும் கிறிஸ்துவ சமய எதிர்ப்பாளர்களாய் இருந்தனர். அவர்கள் மீது அளவில்லா வெறுப்புக் கொண்டு அவர்களை நாட்டை விட்டு வரட்ட உறுதி பூண்டனர். வலிமைமிக்க அன்னியர்களை எதிர்த்து போராட வேண்டுமென்றால் உறுதியான உடற்கட்டு தேவை என்று உணர்ந்து அதற்குரிய பலவித உடற்பயிற்சிகள் செய்து வந்தனர். அவர்கள் இரவில் ஒன்று கூடி உடற்பயிற்சி செய்ததால் ‘‘குத்துச் சண்டை வீரர்கள்’’ எனப்பொருள்படும் ‘‘பாக்சர்’’ என்று பெயரிட்டழைக்கப்பட்டனர். பாக்சர்கள் சீனப் பண்பாட்டுப் பாரம்பாரியங்களில் பற்றுக் கொண்டிருந்தவர்கள் கிறிஸ்துவ சமயம் அவற்றை பழித்துரைப்பதால் அச்சமயத்தின் மீதும் அச்சமயத்தை தழுவியவர்கள் மீதும் வெறுப்புக் கொண்டனர்.

**பாக்சர் எழுச்சியின் காரணங்கள்:-**

சமயப் பரப்பாளரிகளின் நடவடிக்கைகள்:- சமயப் பாப்பாளர்கள் பல பயனுள்ள சமூகநலப்பணிகள், கல்விப்பணிகள் புரிந்தாலும் தொடக்கத்திலிருந்தே பழமைப்பற்றாளர்களான சீனர்கள் அவர்களின் நடவடிக்கைளைச் சந்தேகக்கண் கொண்டே நோக்கினர்.

**சீனக்கிறிஸ்தவர்கள்**

சீன உயர் அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் அந்தஸ்து தங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என கிறிஸ்துவ சமயக்குருக்களும் திருச்சபை அதிகாரிகளும் எதிர்பார்த்தனர்.இதனால் அவர்களையும் ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற எண்ணம் பாக்சர்களிடம் வேரூன்றியது.

**ஏகாதிபத்தியங்களின் மீது வெறுப்பு:-**

ஐரோப்பிய வல்லரசுகள் உன்படிக்கைத் துறைமுகங்களிலிருந்து கொண்டு சீனா முழுவதிலும் தாங்கள் ஆதிக்கத்தைப் பரப்பி வந்தன. இதனைக் கண்ணுற்ற சீன மக்கள் அந்நியர் மீது வெறுப்புற்றனர்.

**பாக்சர் கலகம்**

பாக்சர்களின் அன்னிய எதிர்ப்பு வெறி 1900 ஜுனில் கலகமாக எழுச்சியுற்றது பழமைப்பற்று மிக்க மஞ்சு நிர்வாக வர்க்கம் கிளர்ச்சிக்கு ஆதரவளித்தது. ஷாண்டுங், சிஹுலி, ஷான்சி, மஞ்சூரியா போன்ற வடமாநிலங்களில் தீவிரமாகப் பரவியது. இருப்புப் பாதைகளைப் பெயர்த்தனர் தந்தி தொடர்புகளைத் துண்டித்தனர். சமயப்பிரச்சாரர்கள் தாக்கப்பட்டனர் கிறிஸ்துவ கோவில்கள் பள்ளிகள் நொறுக்கப்பட்டன. கண்ணில் பட்ட அன்னியர்கள் கொல்லப்பட்டனர். கிறிஸ்தவர்களும் அவ்வாறு கொல்லப்பட்டனர். கலகம் காட்டுத் தீ போல் பரவியதைக்கண்ட தவாஜர் பேரரசி கலகக்காரர்களுக்கு உதவுமாறு மாநில ஆளுநர்களுக்கு

குறிப்பனுப்பினார். பீகிங்கிளில் உள்ள அன்னிய தூதரகங்களை முற்றுகையிடுமாறு பாக்சர்களை தூண்டினார். பின்னர் வெளிப்படையாகவே வெளியார்மீது போர்ப் பிரகடனம் செய்தார்.

இதனால் உற்சாகமடைந்த பாக்சர்கள் ஆவேசத்தாக்குதல் கொடுத்தனர். ஜப்பான் தூதரக அதிகாரி கொல்லப்பட்டார். ஜெர்மன் தூதர் வான் கெட்லர் நடுவீதியில் சுட்டுக் கொல்லப்பட்டார். எங்கும் வன்முறை தலைவிரித்தாடியது. மொத்தம் 40,000 சீனக் கிறிஸ்தவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

**வெளிநாட்டுப்படை வருகை**

சீன அரசும் பாக்சர்களும் நடத்திய கூட்டுக்கொலை கொள்ளையைக் கண்ட வெளிநாட்டினர் படைதிரட்டி கிளர்ச்சியாளர்களை ஒடுக்கத் திட்டமிட்டனர். ஜப்பான், ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து படை வீரர்கள் வந்தனர். ஆகிய நாடுகளைக் கொண்ட வெளிநாட்டு கூட்டுப்படைகளுக்கு ஜெர்மன் தளபதி வால்டெர்சி தலைமைத் தாங்கினார். 10 நாட்டுகளுக்குள் அப்படை கலவரத்தை அடக்கியது.

**பாக்சர் ஒப்பந்தம்**

தங்களுக்கு விரோதமாக கிளர்ந்தெழுந்த சீனர்களைத் தண்டிக்க வல்லரசுகள் முடிவு செய்தன. பீகிங்கில் சீனாவின் சார்பில் லிஹுங் சங் வெளிநாட்டுப் பிரதிநதிகளைச் சந்தித்து அமைதிப் பேச்சுவார்த்தையை தொடங்கினார். 11 நாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இறுதியில் 1901 செப்டம்பர் 7-ஆம் நாள் பாக்சர் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

அதன் நிபந்தனைகளாவன.

1) பாக்சர் கலவர நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பேற்று சீன அரசு பொதுவாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டது.

2) ஜெர்மன் தூதர் வான் கெட்லர் கொல்லப்பட்ட இடத்தில் சீன அரசின் செலவில் அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்பவேண்டும்

3) கலவரத்தில் விடுபட்ட அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

4) வெளிநாடுகளுக்கு மொத்தம் 450 மில்லியன் வெள்ளி நாணயங்கள் இழப்பீடாக நான்கு சதவீத வட்டியுடன் 38 தவணைகளில் சீனா செலுத்த வேண்டும் இந்த தொகைக்கு உறுதியளிக்கும் வகையில் சுங்கவரி, உப்பு தயாரித்தல் ஆகியவற்றின் வருவாய்களை அளிக்க வேண்டும்

5) சீனாவிற்கு படைக்கலன்கள் ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டது.

6) வெளிநாட்டினர் தங்கள் தூதரகங்களை பாதுகாத்துக்கொள்ள பீகிங்கில் படைகளை நிறுத்திவைக்க அனுமதிக்கப்பட வேண்டும்

7) சுங்க வரித்துறை, மேனாட்டினர் நிர்வாகத்தின்கீழ் கெண்டுவரப்பட்டது.

8) டியன்சின் மேனாட்டினர் ஆதிக்கத்தின் கீழ் வைக்கபடவேண்டும்

9) பழைய வணிக ஒப்பந்தங்கள் மறுபரிசீலனைக்கு விடப்படவேண்டும்

10) வெளிநாட்டினர் சீனாவில் முதலீடு செய்வதற்கான தடை அகற்றப்பட வேண்டும்

11) வெளிநாட்டுறவை நிர்வகிப்பதற்கு சுங்லியமனுக்குப் பதிலாக புதியதொரு நிர்வாகத்துறை உருவாக்கப்பட வேண்டும்

**தோல்விக்கான காரணங்கள்**

சீனப் படையானது ஒருங்கிணைந்து செயல்படவில்லை ஒரு வலிய மையத் தலைமை கூட இல்லை. வெளிநாட்டுத் தூதரகங்களை பாக்சர்களும் சீனப்படைகளும் முற்றுகையிட்ட போது தளபதி ஜுங்லு பீரங்கிப் படையை பயன்படுத்த மறுத்துவிட்டார். இக்கலகம் வெளிநாட்டினரை விரட்டிவிடும் என தளபதிகள் எவரும் நம்பவில்லை சான்றாக யுவான் ஷி கேது பாக்சர்களை ஆதரிப்பதில் பயனில்லை. அவ்வாறு ஆதரிப்பது தற்கொலைக்கொப்பானது என்று கூறினார்.

அன்னிய எதிர்ப்பு வெறி என்ற ஆவேசத்தைத் தவிர மக்களின் ஆதரவைப் பெறவல்ல ஆக்கரீதியான திட்ட மெதனையும் தயாரிக்கவில்லை.

பாக்சர்களைத் தோற்கடித்ததில் மேற்கத்திய படைவலிமையின் பங்கை குறைத்து மதிப்பீட்டு விடமுடியாது. அவர்களது நவீன போர்க் கருவிகளும் போர் முறையும் பாக்சர் எதிர்ப்பை முறியடித்துவிட்டன.

**விளைவுகள்:-**

சீனாவின் பெருமையை நிலைநாட்டும் நோக்குடன் தொடங்கப்பட்ட பாக்சர் எழுச்சி எஞ்சியிருந்த பெருமையையும் பறித்துவிட்டு சிறுமையைக் கொடுத்தது. அன்னியர்களுக்கு மேலும் பல சலுகைகள் வழங்கப்பட்டன. அந்நியர்களுக்கு மேலும் பல சலுகைகள் வழங்கப்பட்டன. தலைநரில் படைநிறுத்தும் உரிமை, கடற்கரையிலருந்து தலைநகர் வரையிலுள்ள பெருவழிச்சாலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஆகியவற்றைப் பெற்றது.

மஞ்சு மரபு மீது சீனர்கள் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் குறைந்து கொண்டே போனது. எனவே இது மஞ்சு மரபின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்தியது.

பெரும் அளவிலான இழப்பீட்டுத் தொகை சீனப் பொருளாதாரத்தைப் பெருமளவில் பாதித்து. அவர்களுடைய முக்கிய வருவாய் ஆதாரமான சுங்கவரி, உப்புவரி ஆகியவை இழப்பீட்டுத் தொகைக்கென ஒதுக்கப்பட்டிருந்ததால் பற்றாக்குறை பொருளாதாரமே சீனாவின் நிரந்தர நிலையாகிவிட்டது. மஞ்சு மரபினர் மேற்கத்திய சீர்திருத்தங்களின் அவசியத்தை காலங்கடந்து உணர்ந்தனர்.

**திறனாய்வு:-**

பாக்சர் கலத்திற்கும் "இந்திய சிப்பாய் கலகத்திற்கும்" பெரும் ஒற்றுமை இருக்கிறது. இரண்டுமே அன்னிய வெறுப்புணர்ச்சியிலும் சொந்த சமயப்பற்றினாலும் தோன்றியவை. இரண்டிலுமே பழமையாளர்கள் தாம் முக்கியப் பங்கெடுத்தனர் முந்தியதற்கு மஞ்சு மரபு ஆதரவளித்தபோது பிந்தியதற்கு முகலாய மரபு ஆதரவளித்தது. சிப்பாய்க் கலகம் முகலாய மரபை முற்றுப்பெறச் செய்தபோது பாக்சர் கலகம் மஞ்சுமரபை மரணப்படுக்கைக்கு

அனுப்பியது. இரண்டிலுமே ஏகாதிபத்தியங்கள் தாம் வெற்றி பெற்றன எனினும் இரண்டும் தேதிசய உணர்வுகளுக்கு புதிய உத்வேகமளித்தன.

## மஞ்சுக்களின் சீர்திருத்தப்பணி(1902-11)

பாக்சர் கலவரம் ஒரு மகத்தான உண்மையை எடுத்துரைத்தது. சீனா மேற்கு நாடுகளைப் போல் முன்னேற்றம் பெறவேண்டுமானால் மேற்கு நாடுகளின் அரசியல், பொருளியல், சமூக அமைப்புகளைப் பின்பற்ற வேண்டும். அதாவது சீன சீர்திருத்தம் பெறவேண்டும் என்பதுதான் அந்த மகத்தான உண்மை. அந்த உண்மையை பழமைப் பற்றும் பிற்போக்கு எண்ணமும் கொண்ட தாவஜர் பேரரசி சற்றுத் தாமமதமாகவே உணர்ந்து கொண்டார். அந்த தவறைத் திருத்துவதற்காக தாமே சீர்திருத்த ஆணைகளை வெளியிட்டார். 1898-ல் எந்த சீர்திருத்த ஆணைகளை ரத்து செய்தாரோ அவற்றை 1902-ல் புதுப்பிக்க முன் வந்தது வரலாற்று வினேதங்களுள் ஒன்று.

**கல்விச் சீர்திருத்தங்கள்:-**

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சீனாவில் கன்பூசியஸ் பாரம்பரிய முறைப்படி அரசுப் பணித்தேர்வுக்கு தயார் செய்யும் கல்வி முறையே பின்பற்றப்பட்டு வந்தத, அம்முறை 1905-ல் பேரரசு ஆணை மூலம் ஒழிக்கப்பட்டது. ஜப்பானில் இருப்பது போன்ற கல்விமுறை சீனாவில் புகுத்தப்பட்டது. மேற்கத்திய பாடத்திட்டங்களைக் கொண்ட புதிய கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டது. புதிதாக கல்வி அமைச்சகம் திறக்கப்பட்டது. கோவில்கள்கூட பள்ளிகளாக மாற்றப்பட்டன. தாவஜர் பேரரசிகூட தமது ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து பெண்களுக்கு கல்வி நிலையம் அமைத்தார். பள்ளிகளுக்கு நிதி வசதியும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் பற்றாக்குறையாக இருந்தது. எனினும் ஜப்பானிலிருந்து ஏராளமான ஆசிரியர்கள் வந்தனர். எனவே ஆயிரக்கணக்கான பள்ளிகள் தோன்றின. மேல்படிப்பிற்காக ஏராளமான மாணவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். அரசுப் பணித்தோவின் எட்டுக்கால் கட்டுரை அகற்றப்பட்டு தற்கால பொது அறிவு பாடம் வைக்கப்பட்டது.

**சமூகச் சீர்திருத்தங்கள்:-**

1. கலப்பு திருமணத்திற்கான தடை அகற்றப்பட்டது.
2. பெண்கள் பாதங்களை கட்டும் வழக்கம் ஒழிக்கப்பட்டது.
3. வெளிநாட்டரசுகளின் ஒத்துழைப்புடன் அபின் இறக்குமதி பெருமளவில் குறைக்கப்பட்டது.
4. மக்கள்தெகை கணக்கெடுப்பு முறை சீரமைத்து செயல்படுத்தப்பட்டது.

**நிர்வாகச் சீர்திருத்தங்கள்**

1. தேவையில்லாத பல பதவிகள் ஒழிக்கப்பட்டு புதிய மாறுதல்களுக்கேற்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன.
2. சுங்கலியமனுக்குப் பதிலாக புதிய வெளிநாட்டமைச்சகம் உருவாக்கப்பட்டது.

3. 1906-ல் வேளாண்மை கைத்தொழில் வாணிப அமைச்சரகம் அமைக்கப்பட்டது.
4. வாணிபச் சட்டங்கள் கம்பெனிச் சட்டங்கள் வெளியிடப்பட்ன.
5. நீதித்துறை சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்ய 1902- ல் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதன்பேரில் சித்ரவதை மற்றும் கொடிய தண்டனைகள் ஒழிக்கப்பட்டன.

**படைச் சீர்திருத்தங்கள்:-**

**யுவான் ஷி கே** போன்ற உயர் அலுவலர்கள் தனிப்பட்ட முறையில் நவீன பயிற்சி பெற்ற படைகளை நிர்வகித்து வந்தனர். அவர் 80000 வீரர் கொண்ட படையை வைத்திருந்தார். ஆனால் 1908-ல் இம்முறை ஒழிக்கப்பட்டது. போர்த்துறை அமைச்சகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் **தேசிய இராணுவம்** அமைக்கப்பட்டது.

**அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்:-**

1905-ல் பேரரசி ஷுஷி அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிறகும் ஆய்வக்கழுக்களை அனுப்பி அங்குள்ள அரசியலமைப்புச் செல்பாடுகளை அறிந்து நவீன சீனாவிற்குரியதை பரிந்துரை செய்யுமாறு பணித்தார்.

இந்த அடிப்படையில் 1908-ம் ஆண்டு அரசியலமைப்பு வகுக்கப்பட்டது. இது படிப்படியாக 9 ஆண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதன் முக்கியக் கூறுகள்

பேரரசர் விரிவான அதிகாரங்களைக் கொண்டிருப்பார். பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், சட்டமியற்றல், போர் பிரகடனம் செய்தல், உடன்படிக்கை செய்தல் ஆகியவற்றில் முழு அதிகாரம் பெற்றிருப்பார்.

ஈரவை பாராளுமன்றம் ஒன்று ஒன்பது ஆண்டுகளுக்குப் பின் அமைக்கப்பட வேண்டும்

மாநில சட்டமன்றங்கள் உடனடியாக அமைக்கப்பட வேண்டும் சட்டமன்ற பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்வாளர்களை முதலில் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களின் வாக்குரிமை சொத்து அல்லது கல்வித்தகுதியால் நிர்ணயிக்கப்பட்டன.

1910-ல் தேசியப் பேரவை கூட்டப்பட்டது. இதன் மொத்த உறுப்பினர்கள் 200 அவற்றுள் 100 பேர் பேரரசரால் நியமிக்கபடுவர் மீதமுள்ள 100 பேர் மாநில மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்தகைய பேரவை சில முற்போக்கு சீர்திருத்தங்களைக் கோரியது. பாராளுமன்றம் 1913ல் கூட்டப்பட வேண்டுமென்றும் அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக இயங்க வேண்டுமென்றும் வேண்டுகோள்விடுத்தது.

இந்த அரசியலமைப்பு மக்களுக்கு மனநிறைவளிக்கவில்லை. வரையறைக்குட்பட்ட முடியாட்சி அமையும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் வரம்பில்லா முடியாட்சிதான் உருவாக்கப்பட்டது. சட்டமியற்றல், நிர்வாகம் நடத்துதல், நீதிவழங்குதல் ஆகிய அனைத்து அதிகாரங்களும் பேரரசரிடமே ஒப்படைக்கப்பட்டன.

**திறனாய்வு**

இப்போதுள்ள முறையை நிரந்தரமாக்கும் பொருட்டு அதற்கு அரசியலமைப்பு உறுதிமொழி சாயம் பூசப்பட்டுள்ளது. எனவே பாராளுமன்ற முறையிலான அரசை எதிர்பார்த்த வியாங்சி சாவோ, சன் யாட் சென் ஆகியோருக்கு இது ஏமாற்றமளிப்பதாயிருந்தது.

## 1911ஆம் ஆண்டுப் புரட்சி

267 ஆண்டு கால மஞ்சு மரபின் ஆட்சியை முடித்துவைத்த 1911ம் ஆண்டுப் புரட்சி தவிர்க்க இயலா ஒன்று. முதல் அபினிப்போருக்குப் பின் நடைபெற்ற அனைதது நிகழ்ச்சிகளும் மஞ்சு மரபின் அருமை பெருமையையும் ஆற்றலையும் சிறுகச் சிறுகச் சிதைத்து செல்லாக்காசாக்கிக் கொண்டிருந்தன எனவே புரட்சி ஏற்பட்டது.

**புரட்சிக்கான காரணங்கள்:-**

**மஞ்சுகள் அன்னியர்கள் என்ற உணர்வு:** இரண்டரை நூற்றாண்டு காலம் சீனாவை ஆட்சி புரிந்தாலும் மஞ்சுகள் சீன மக்களுடன் இரண்டறக் கலந்துவிடவில்லை. உண்மையில் மஞ்சுகள் சீன இனத்தைச் சேர்ந்தவர்களல்லர் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள்.

அன்றையிலிருந்து சீனர்கள் அவர்களை அன்னியர்கள், சீன மண்ணின் மைந்தர்களான மிங்குகளிடமிருந்து அரியணையை அபகரித்தவர்கள். சீன மண்ணை ஆக்கிரமித்தவர்கள் என்றே கருதினர்.

இந்த “அன்னியர் ஆட்சியை” ஒழிக்க சமயம் வாய்க்கும் போதெல்லாம் கிளர்ந்தெழுந்தனர். பழமை விரும்பிகளான மஞ்சுகள் நெகிழ்ந்து கொடுக்க மறுத்தனர். மேற்கத்திய தாக்கத்தால் முற்போக்கு கருத்துக்களால் கவரப்பட்ட கற்றறிந்த சீனர்கள் அந்த முட்டுக்கட்டையை உடைத்தெறியத் துடித்தனர்.

**சீர்திருத்தங்களின் தோல்வி:-**

சீனாவை மீண்டும் வலிவும், பொலிவுமுள்ள நாடாக வேண்டுமென்றால் அதற்கு ஒரே வழி மேற்கத்திய அரசியல் தொழிலியல் நிறுவனங்களைப் புகுத்தும் சீத்திருத்தங்கள் தாம் என கற்றறிந்த சீனர்கள் எதிர்பார்த்தனர். எனவே காங் யுவையின் செல்வாக்கினால் பேரரசர் குவாங் ஷூ விடுத்த சீர்திருத்த ஆணைகளை ஆர்வத்துடன் வரவேற்றனர்.

சீனாவின் முன்நேற்றத்திற்கு மிகப்பெரிய முட்டுக்கட்டை மஞ்சு மரபின் ஆட்சி என்ற உணமையை உணர்ந்த சீனர்கள் அம்மரபினை வீழ்த்தும் புரட்சித் திட்டங்களை வகுக்கத் தொடங்கினர்.

**பொருளியல் காரணங்கள்:-**

சீனாவின் பொருளாதாரம் பல காரணங்களால் சீரழிந்து கொண்டிருந்தது. அபின் வாணிபம், காப்புவரி விதிக்கும் உரிமை இன்மை, போர் இழப்பீடுகள், சுங்கவரிகள் மீது வெளியார் ஆதிக்கம், வெளியார் சுரண்டல்கள், படைச் சீரமைப்புச் செலவு, இருப்புப்பாதை அமைப்பு செலவினங்கள் ஆகியவை காரணமாக சீன அரசு திவாலாகும். நிலைக்கு

வந்துவிட்டது. அதன் காரணமாக வறுமையில் வாடும் மக்கள் மீது வரிமேல் வரிவித்தனர். இது மக்களின் மனக்குமுறலை அதிகரித்தது.

**மக்களின் தொல்லை துயரங்கள்:-**

மக்கள் தொகைப் பெருக்கம், வெள்ளம், வறட்சி, பஞ்சம், கைத்தொழில் நலிவு ஆகியவை காரணமாக மக்களின் தொல்லை துயரங்கள் அதிகரித்தன.

இந்த தொல்லை துயரங்களைப் போக்குவதற்கு மஞ்சுப் பேரரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததால் அம்மரபின் ஆட்சி மீது வெறுப்புற்றனர்.

**செய்தித்தாட்களின் பணி:-**

செய்தித்தாட்கள் மஞ்சு மரபு ஆட்சியின் இழிநிலையையும் மக்களின் தொல்லை துயரங்களையும் படம் பிடித்துக் காட்டி, தாராள முற்போக்கு அரசியல் சீர்திருத்தங்களை வலியுறுத்தின. அவைகளுள் குறிப்பிடத்தகுந்தவை காங் யு வையின் சீடரான லியாங் சி சாவோ வெளியிட்ட செய்தித்தாள் விண்மீன்"

அதனையே அவர் "புதிய மக்கள் இதழ்" பொதுமக்கள் கருத்து, "தேசிய உணர்வு" என்ற பெயர்களில் பின்னர் வெளியிட்டார்.

மற்றொரு செய்தித்தாளான சுபாவோ மஞ்சுகளைப் பழித்துரைத்து புரட்சிக்கு மக்களைத் தூண்டியது.

**வெளிநாட்டில் குடியேறிய சீனர்களின் பணி:-**

மக்கள் பெருக்கம் மற்றும் தொல்லை துயரம் காரணமாக வறுமையில் வாடிய சீனர்கள் பிழைப்பிற்காக கடல்கடந்து கலிபோர்னியா மற்றும் தென் அமெரிக்கப் பகுதிகளில் குடியேறினர்.

அங்கு மேற்கு நாடுகளின் உரிமைக் கொள்கைகளான "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" ஆகியவற்றால் உள்ளுணர்வு பெற்றனர். இந்தக் கருத்துக்களை சீனாவிலும் பரப்ப உறுதி பூண்டனர்.

எனவே வெளிநாட்டிலிருந்து கொண்டு ''டாக்டர் சன் யாட் சென்'' புரட்சி இயக்கத்தை உருவாக்கியபோது அதற்கு ஆதரவளித்ததோடு பணமும் கொடுத்துதவினர். அதே போன்று வெளிநாடுகளில் கல்விகற்கச் சென்ற மாணவர்களும் புரட்சிக் கருத்துக்களில் ஈடுபாடு கொண்டு சன்யாட் சென்னின் புரட்சி இயக்கத்திலும் சேர்ந்தனர்.

**நிர்வாகக் சீர்கேடு:-**

நாட்டில் அதிகரித்தவரும் பிரச்சினைகளுக்கு ஏற்ப நிர்வாகம் மாற்றியமைக்கப்படாமல் பெரும்பாலும் பழைய முறைலேயே நடைபெற்றது. மேலும் மாநில ஆளுநர்கள் மைய அரசின் வலுவற்ற தன்மையை உணர்ந்திருந்ததால் சுதந்திர மன்னர்கள் போல் நடந்து கொண்டனர். மைய மாநில அரசுகளுக்கடையில் ஒருங்கிணைப்போ, ஒத்துழைப்போ இல்லை.

**ரஷிய- ஜப்பானியப் போர்:-**

1904-05ல் நடைபெற்ற ரஷிய - ஜப்பானியப் போரில் பெற்ற வெற்றி சோம்பிக் கிடந்த ஆசிய மக்களை தட்டியெழுப்பியது. மேற்கு வல்லரசுகள் தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் என்ற மாயையைப் போக்கியது. ஜப்பானைப் போன்று சீனாவும் மேற்கத்திய முறைகளைப் பின்பற்றிய முன்னேற வேண்டும். அதற்கு இடையூறாயிருக்கும் மஞ்சு மரபின் ஆட்சி ஒழிக்கப்படவேண்டும் முடிவு செய்தனர்.

**உடனடிக்காரணம் (இருப்புப்பாதை தேசியமயம்)**

சீன வணிகர்கள் பலர் ஒருங்கிணைந்து மத்திய - தெற்கு சீனப்பகுதியில் இருப்புப்பாதை அமைக்கும் நிறுவனம் ஒன்றை அத்தைனர் ஆனால் திடீரென சீன அரசு 1911ல் அந்த இருப்புப்பாதை திட்டத்தை சேதியமாக்கியது. அவ்வாறு தேசியமயமாக்கியதன் மூலம் சீன அரசே அந்த இருப்புப்பாதையை அமைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் என்பதல்ல. அதனை அமைக்கும் உரிமையை வெளிநாட்டு வங்கிகளில் ஒத்திவைத்து ஆறு மில்லியன் பவுன் கடன் பெறுவதற்காகத்தான் இதனை சீன வணிகர்களை கடுமையாக எதிர்த்தனர். தேசியமயமாக்குவதை எதிர்த்து ஷி சுவான் மாநிலத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது எனவே பல பகுதிகளில் குழப்பங்கள் மூண்டன.

இச்சமயத்தில் ஹாங்கௌ நகரில் புரட்சியாளர்கள் இரசிகயமாக வெடிகுண்டு தயாரிக்கும்போது பெரும் வெடி விபத்து ஏற்பட்டது. பலர் உயிரிழந்தனர். அரசு இதனைக் காரணமாகக் கொண்டு புரட்சியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்முன் புரட்சியைத் தொடங்கிவிட வேண்டும் என முடிவு செய்தனர் எனவே வெளிநாட்டிலிருக்கும் தங்கள் தலைவர் டாக்டர் சன் யாட் சென்னைக் கூட கலந்து கொள்ளாமல் புரட்சியைத் தொடங்கினர்.

**புரட்சியின் போக்கு:**

புரட்சியாளர்கள் உடனடியாக வூசாங்கிலுள்ள தளபதி லி யுவான் ஹங் என்பவரைக் கட்டாயப்படுத்தி தங்களோடு சேருமாறு செய்தனர் ஏற்கனவே படைவீரர்கள் துங் மெங் ஹுய் பிரச்சாரம் காரணமாக புரட்சிக்கு சாதகமாயிருந்ததால் அவர்கள் பணி எளிதாயிற்று ஹாங்கௌ, ஹன்யாங் வூசாங் ஆகிய நகரங்கள் புரட்சியாளர்களிடம் சிக்கின இவ்விடங்களில் இருந்து பிற இடங்களுக்கு புரட்சி பரவியது.

மாநிலங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மஞ்சு மேலாதிக்கத்தை உதறித் தள்ளிவிட்டு சுதந்திரமடைந்ததாக அறிவித்தன. புரட்சியாளர்கள் பண்டைய மிங் மரபின் தலைநகரான நாங்கிங்கை கைப்பற்றி அதனைத் தங்கள் தலைநகராகக் கொண்டனர். மஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற மாநிலங்கள் நாங்கிங் நகரத்திற்கு தங்கள் பிரதிநிதிகளை அனுப்பினர். அவர்கள் 1912 ஜனவரி முதல் தேதி டாக்டர் சன் யாட் சென்னை தற்காலிக குடியரசுத் தலைவராகத் தேர்நதெடுத்தனர்.

### பீகிங்கில் புரட்சியின் எதிரொலி

தெற்கு மாநிலங்களின் இவ்வாறு மஞ்சு ஆட்சியை எதிர்த்து வெற்றிகரமாக புரட்சி செய்த போது பீகிங்கிலுள்ள மஞ்சு அரசு என்ன செய்வதென்று தெரியாது திகைத்து நின்றது. அரியணையில் 6 வயது பாலகன் பு யி பேரரசாக அமர்ந்திருந்தார். பகர ஆளநராக இளவரசர் சுன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார். அரசியலமைப்பு முறையிலான முடியாட்சியை நிறுவ இணங்கினார். ஆனால் புரட்சியாளர்கள் மஞ்சு மரபு ஒழிக்கப்பட்டு குடியாட்சி நிறுவப்பட வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தினர். நிலைமையை சமாளிக்க வேறுவழி தெரியாத சுங், யுவான் ஸி கேயை அழைத்து அவரிடம் படைத்தலைமை உட்பட ஆட்சிப் பொறுப்பு அனைத்தையும் ஒப்படைத்தார். பின்னர் பீகிங்கில் உள்ள தேசியப் பேரவை அவரை பிரதம அமைச்சராக தேர்ந்தெடுத்தது.

### அமைதிப் பேச்சுவார்த்தைகள்:

அப்போது சீனாவில் இரு ஆட்சி மையங்கள் இருந்தன. பீகிங்கில் மஞ்சு மரபின் பிரதம அமைச்சராக அமைத்து அதிகாரங்களையும் பெற்று யுவான் ஷி கே வலிமையுடன் இருந்தார். அவர் அரசியலமைப்பிற்கு உட்பட்டிருந்த மஞ்சு முடியாட்சி நீடிக்க வேண்டும் என்று கருதினார். வலிமைமிக்க தம் படைகளை புரட்சியாளர்கள் மீது ஏவி அவர்களோடு போர் புரியவும் தயாராயில்லை. மாறாக அரசியலமைப்பு முறையிலான முடியாட்சிக்கு அவர்களை இணங்க வைக்கத் திட்டமிட்டார். மற்றொரு புரட்சி மரசு நாங்கிங்கைத் தலைநகராகக் கொண்டு இயங்கியது. டாக்டர் சன் யாட் சென் அதன் தற்காலிகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அவருடன் புரட்சிப் படைகள் போரிட்டால் அது நீண்டகால உள்நாட்டுப் போராக மாறிவிடலாம். இதனால் நாடு மேலும் சின்னாபின்னப்பட்டுவிடும் என்று அஞ்சினார். எனவே மஞ்சு மரபின் ஆட்சியை ஒழிக்க வேண்டும் என்ற ஒரே நிபந்தனையின் பேரில் யுவான் ஷி யேுடன் பேச்சு வார்த்தை நடத்த விரும்பினார். அதற்காக தமது குடியரசுத் தலைவர் பதவியை யுவான் ஷி கேயுக்கு விட்டுக் கொடுத்தார். சந்தர்ப்ப வாதியான யுவான் ஷி யே இந்த பொன்னான சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டார். இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபட ஒரே கௌரவமான வழி மஞ்சு போரரசர் முடிதுறப்பதே என மன்னருக்கு ஆலோசனை வழங்கி அதனை ஏற்குமாறு செய்தார்.

### மஞ்சுப் போர் முடிதுறப்பு:

அதன்படி 1912 பிப்ரவரி 12ல் மஞ்சுப் பேரரசர் முடிதுறந்தார். அவர் தமது ஆட்சி அதிகாரங்கள் அனைத்தையும் யுவான் ஷி கேய்க்கு வழங்கினார். இவ்வாறு மஞ்சு பேரரசின் ஆட்சி முடிவிற்கு கொண்டு வரப்பட்டது. யுவான் ஷி கே குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### புரட்சியின் இயல்பும் முக்கியத்துவமும்:

1911 ஆம் ஆண்டுப் புரட்சி மஞ்சு எதிர்ப்பு, பாரம்பரிய எதிர்ப்பு, அன்னியர் எதிர்ப்பு ஆகிய இயல்புகளைக் கொண்டிருப்பதோடு வலுவான தேசிய உணர்வையும் கொண்டிருந்தது. உண்மையில் அது மஞ்சு மரபின் ஆட்சியை முடிவிற்கு கொண்டு வந்தது. கன்பூசியஸ் பாரம்பரிய அரசியல் கருத்துகளுக்குவிடை கொடுத்தது. அன்னியர் தலையீடுகளையும் சலுகை உரிமைகளையும் ஒழிக்க ஒறுதி பூண்டது. டாக்டர் சன் யாட் சென்னுடைய தியாகம் காரணமாக உள்நாட்டுப் போரின்றி அமைதியான முறையில் மஞ்சு மரபு ஒழிக்கப்பட்டது. இப்புரட்சி 264 ஆண்டுகால மஞ்சு மரபின் ஆட்சியை மட்டும் ஒழிக்கவில்லை. இரண்டாயிரம்

ஆண்டுகளுக்கு மேலாக சீனாவில் நிலவிய பாரம்பரிய கன்பூசியஸ் அரசியல் முறையையும் ஒழித்துவிட்டது. முதல் முறையாக சீனாவில் ஒரு குடியரசையும் பாராளுமன்ற ஆட்சி முறையையும் நிலைநாட்டியது. அக்குடியரசிற்கென அரசியலமைப்பும் வகுக்கப்பட்டது. தேசியம் என்ற சொல்லின் பொருளை உணர வைத்ததோடு தேசிய நலன்கள் பாதுகாக்கப்படவும் வழிவகுத்தது. ஆனால் இப்புரட்சி வெறும் அரசியல் மாற்றங்களைத்தான் கொண்டு வந்தது, சமூகப் பொருளியல் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.

## யுவான் ஷி கே

1911ஆம் ஆண்டுப் புரட்சியை "இரத்தம் சிந்தா புரட்சி" என்று கூறலாம். உள்நாட்டுப் போரோ அரசியல் படுகொலைகளோ, தூக்குத் தண்டனைகளோ இல்லாமல் அமைதிப் பேச்சு வார்த்தைகள் மூலம் மஞ்சு மரபின் ஆட்சி முடிவிற்கு கொண்டு வரப்பட்டது. 1912 பிப்ரவரி 12ல் மஞ்சுப் பேரரசர் பு யி முடிதுறந்தார். இவ்வாறு முடிதுறக்குமுன் ஆட்சி அதிகாரங்கள் அனைத்தையும் யுவான் ஷி கேயிடம் வழங்கினார்.

### தொடக்ககால அரசியல் வாழ்க்கை:

1859ல் ஹொனான் மாநிலத்தில் சிறிய நிலக்கிழார் குடியில் யுவான் தோன்றினார். அன்றைய சூழ்நிலையில் சீனாவில் இராணுவப் பதவி பெறுவதன் மூலம்தான் அதிகாரம் பெற முடியும் என்று கண்ட அவர் 1880ல் இராணுவப் பதவி ஒன்றினைப் பெற்றார். அப்பதவியில் அவரது செயலாற்றில் திறனைக் கண்ட லி ஹங் சங் பதவி உயர்வளித்தார்.

### பெயாங் படைத்தலைவர்

சீன ஜப்பானியப் போருக்குப்பின் பீகிங்கில் மஞ்சு உயர் அதிகாரிகளின் நம்பிக்கையைப் பெற்றார். குறிப்பாக போர்த்துறை தலைவர் ஜுங்லுவின் நல்லெண்ணத்தைப் பெற்றார். அதன் பயனாக டியன் சினுக்கு அருகிலுள்ள பெயாங் படைப் பயிற்சிப் பள்ளியின் தலைவராக நியமனம் பெற்றார். மேற்கத்தியப் பாணியில் மேற்கத்திய படைக்கலங்களுடன் ஒரு படையை உருவாக்கினார். அது தேசியப்படையாக இல்லாமல் யுவானின் சொந்தப் படையாகவே வளர்ச்சியுற்றது.

### பாக்சர் புரட்சியும் யுவானும்:

பாக்சர் புரட்சியின் போது பாக்சர்களுக்கு உதவிபுரிய வெண்டுமென்று மஞ்சு பேரவை ஆணையிட்ட போதும் யுவான் அதனைப் புறக்கணித்துவிட்டார். ஏனென்றால் மேற்கத்தியர்களை எதிர்த்து வெற்றி பெறுவது அவ்வளவு எளிதானதல்ல என்பதை நன்கு அறிந்திருந்தார். அப்புரட்சியின் போது அன்னியர்களுக்கு சற்று ஆதரவாகவோ செயல்பட்டார்.

### யுவானும் 1911 ஆம் ஆண்டுப் புரட்சியும்:

1908ல் ஷூஷியின் மரணத்திற்குப் பின் யுவான் ஷி கேயின் வாழ்வில் திடீர் இறக்கம் ஏற்பட்டது. புதிய குழந்தைப் பேரரசின் காப்பாளரான இளவரசர் சுன் யுவானைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார். எனினும் அதிர்ஷ்டம் அவரை விரைவில் தேடிவந்தது. 1911ல் புரட்சி வெடித்தது தெற்கு மாநிலங்கள் நாங்கிங்கை தலைநகராக்கி சன் யாட் சென்னை புதிய குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்த செய்தி கேட்டு மஞ்சு மரபினர் செய்வதறியாது திகைத்து நின்றனர். இந்த இக்கட்டான நிலையிலிருந்து மஞ்சு மரபை காப்பாற்றவல்ல ஆற்றல் மிக்கவரை தேடினர். இறுதியில் வெநாட்டினர் ஆலோசனையின் பேரில் இளவரசர் சுன்,

யுவான் ஷி கேயை வரவழைத்து அவரிடம் நாட்டின் அதிகாரங்களையும் படைத்தலைமையையும் ஒப்படைத்தார். தேசியப் பேரவை அவரை பிரதம அமைச்சராக தேர்ந்தெடுத்து இவ்வாறு 1911 இறுதியில் மஞ்சு மரபின் காவலராக குழப்பங்களிலிருந்து சீனாவைக் காப்பாற்றும் வலிமை வாய்ந்த தலைவராகக் காட்சியளித்தார்.

**குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுதல்:**

இச்சமயத்தில் புரட்சியாளர்கள் டாக்டர் சன் யாட் சென்னை குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். வடக்கில் பீகிங்கைத் தலைநகராகக் கொண்டு யுவான் ஷி கே மஞ்சுப் பேரரசின் பிரதம அமைச்சராகத் திகழ்ந்தார். தெற்கில் நாங்கிங்கைத் தலைநகராகக் கொண்டு சன் யாட் சென் குடியரசுத் தலைவராய்த் திகழ்ந்தார். சீனாவில் இருந்த இவ்விரு அரசுகளுக்கிடையில் போர் மூளும் அபாயம் தோன்றியது. சீனாவில் உள்நாட்டுப் போப் மூளுமானால் அது தற்கொலைக்குகொப்பானதாயிருக்கும் என உணர்ந்த சன் யாட் சென் பேச்சு வார்த்தை மூலம் தமது குறிக்கோளை அதாவது மஞ்சு மரபின் ஆட்சியை எவ்வகையாயினும் ஒழித்தல் என்ற குறிக்கோளை அடையத் திட்டமிட்டார். அதற்கு தம் குடியரசுத் தலைவர் பதவியைக் கூட தியாகம் செய்ய முன்வந்தார். மஞ்சு மரபின் ஆட்சியை ஒழித்து நாங்கிங்கை சீனாவின் தலைநகராகக் கொள்ள யுவான் முன் வந்தால் சீனாவின் குடியரசுத் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார். இதனை யுவான் ஏற்றுக் கொண்டார். அதன்பின் மஞ்சுப் பேரரசை முடிதுறக்கச் செய்வது அவருக்கு கடினமான காரியமாக இருக்கவில்லை. முடிதுறக்கும் போது தமது அதிகாரங்கள் அனைத்தையும் ஞவான் ஷி கேயிடம் ஒப்படைத்து விட்டதாக பேரரசர் அறிவித்தார். அதன்பின் சன் யாட் சென் உறுதியளித்தபடி நாங்கிங் தேசியப்பேரவை யுவானை குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்து, அவர் 1912ல் பீகிங்கில் குடியரசுத் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

**முடி மன்னராகும் ஆசைக் கனவு**

சீனாவின் முதல் குடியரசுத் தலைவர் என்ற சிறப்பினைப் பெற்ற யுவான் குடியரசுக் கோட்பாட்டில் சிறிதும் நம்பிக்கையில்லாதவர். ஓராண்டு காலத்திற்குள்ளாகவே சீனர்களின் குடியாட்சிகளின் மீதான நம்பிக்கையை இழந்தனர். எனினும் தீவிர குடியாட்சியாளர்களை முற்றிலும் ஒடுக்கி தமது அதிகார அந்தஸ்தை உயர்த்தும் அரசியலமைப்பை வகுத்து சட்ட ரீதியான சர்வாதிகாரியாக திகழ்ந்த யுவானுக்கு முடி மன்னராகும் ஆசை ஏற்பட்டது. எனினும் இரண்டு எதிர்பாராத நிகழ்ச்சிகள் அவரது ஆசைக்கனவை கலைத்துவிட்டன. ஒன்று முதல் உலகப் போரின் தொடக்கம், இரண்டு ஜப்பானின் எதிர்ப்பும், இருபத்தியோரு அம்சக் கோரிக்கையும் ஆகும். முதல் உலகப் போரில் ஐரோப்பிய வல்லரசுகள் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் கிழக்காசிய பிரச்சினைகளில் தலையிடவில்லை. இதனை பயன்படுத்தி அப்பகுதியில் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட ஜப்பான் திட்டமிட்டது. சீனாவின் இக்கட்டான நிலையைப் பயன்படுத்தி ஜப்பான் இருபத்தியொரு அம்சக் கோரிக்கையை தயாரித்து அதனை ஏற்றுக் கொள்ளுமாறு கோரியது. யுவான் தீவிர பரிசீலனைக்குப் பின் சிலவற்றை ஏற்றார்.

**யுவானின் முடிவு**

இருபத்தியோரு அம்சக் கோரிக்கையை யுவான் ஏற்றுக்கொண்டதை அறிந்த சீன மக்கள் கிளர்ந்தெழுந்தனர். இத்தகைய குழப்பமும் கொந்தளிப்புமான சூழ்நிலையில் யுவான் தன் முடி மன்னராகும் ஆசையை கைவிட்டார். இந்த நிலையில் 1916 ஜூன் 6ல் திடீர் மரணம்

### திறனாய்வு

சீனாவின் முதல் குடியரசு முறையிலான அரசியலமைப்புப் பரிசோதனை படுதோல்வியில் முடிந்ததென்றால் அதற்கு முக்கியக் காரணம் யுவான் தான் என்பதை மறுக்க முடியாது. அவரிடம் நாட்டுப்பற்றைவிட தன்னலப்பற்று சற்று அதிகமாயிருந்தது என்பது உண்மை. செயலாற்றும் திறனைவிட செருக்குமிகு அதிகார போதை அதிகமாயிருந்தது என்பது உண்மை.

## சன் யாட் சென்

நவீன சீனாவின் தந்தை எனப்படும் சன் யாட் சென் ஓர் பிறவிப் புரட்சியாளர். ஐக்கிய தேசிய ஜனநாயகக் குடியரசை நிறுவுவதன் மூலம் நவீன சீனாவை உருவாக்க முடியும் என்ற குறிக்கோளைக் கொண்டவர்.

### தொடக்க கால வாழ்க்கை

இத்தகையை வரலாற்றுச் சிறப்பினைப் பெற்ற சன் யாட் சென் தெற்கு சீனாவில் உள்ள எளிய குடியானவர் குடும்பத்தில் 1866ல் தோன்றினார். இளமைப் பருவத்திலே மஞ்சு மரபை எதிர்த்த தைபிங் புரட்சி பற்றிய கதைகள் அவர் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தன. அவர் மேற்கு நாடுகளின் முன்னேற்றத்தையும் சீனாவின் பிற்போக்கு நிலையையும் கண்டு மனம் வெதும்பினார். சீனாவின் இந்த பரிதாப நிலைக்கு காரணம் மஞ்சு மரபுதான். அதனை ஒழித்தால் சீனாவிற்கு விடிவுகாலம் என்ற முடிவிற்கு வந்தார். எனவே புரட்சிக் கருத்துக்கள் அவர் மனதில் வேரூன்றலாயின.

### புரட்சியாளராக சென்:

1894ல் ஸிங் சுங் ஹுய் (சீன மறுமலர்ச்சிக் கழகம்) என்ற புரட்சி இயக்கத்தை தொடங்கினார். மறு ஆண்டில் காண்டனில் புரட்சியில் இறங்கினார். போதிய முன் தயாரிப்பும் மக்கள் இல்லாத அப்புரட்சி தோல்வியில் முடிந்தது. பாக்சர் கிளர்ச்சி, சன் யாட் சென்னின் புரட்சித் திட்டங்களுக்கு பொன்னான வாய்ப்பினை அளித்தது. 1900ல் இருமுறை மஞ்சு மரபிற்கெதிராக கிளர்ச்சிகளைத் தூண்டினார். தெற்கு மற்றும் மத்திய சீனாவில் இக்கிளர்ச்சி சற்று வலுவாக இருந்த போதிலும் ஒடுக்கப்பட்டது. அவரது புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட மஞ்சு அரசு அவரது தலைக்கு விலை வைத்து அவரை உயிருடனோ பிணமாகவோ கொண்டுவருபவர்களுக்கு 7500 டாலர் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

### டுங் மெங் ஹுய் (1905-12):

இறுதியாக சன் யாட் சென் அமைத்த புரட்சிக் கட்சி டுங் மெங் ஹுய் ஆகும். அதன் பெயருக்கேற்ப அது அனைத்து புரட்சி இயக்கங்களின் பொதுவான கூட்டாக இருந்தது. இது மஞ்சு மரபை ஒழித்துவிட்டு சீனாவில் குடியரசை நிறுவ வேண்டும் என்ற ஒரே குறிக்கோளைக் கொண்டிருந்தது. 1905ல் டோக்கியோவில் இப்புரட்சி இயக்கத்தைத் தொடங்கினார். பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸல்ஸ் நகரில் கூட்டிய தம் புரட்சி கட்சியின் முதல் மாநாட்டில் அதன் உறுப்பினர்கள் பல்வேறு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

**1911ஆம் ஆண்டு புரட்சி:**

1911 ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின் தெற்கு மத்திய சீன மாநிலங்கள் மஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுதாக அறிவித்தன. அம்மாநிலங்களின் பிரதிநிதிகள் நாங்கிங்கில் கூடி டாக்டர் சன் யாட் சென்னை தற்காலிக குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

**சன் யாட் சென்னின் தியாகம்:**

இதே சமயத்தில் வடக்கு சீனாவில் மஞ்சு மரபின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. யுவான் ஷி கே பிரதம அமைச்சராகப் பொறுப்பேற்று அனைத்து அதிகாரங்களையும் ஏற்றிருந்தார். யுவான் ஷி கேயை அழிப்பது கடினமான பணி என்று சென் கருதினார். யுவானுடன் இராஜ தந்திர பேச்சு வார்த்தை நடத்தி அதன் மூலம் தன் குறிக்கோளை நிறைவேற்றலாம் என்று எதிர்பார்த்தார். மஞ்சு மரபின் ஆட்சியை அகற்ற யுவான் உதவி புரிந்தால் சீனாவின் குடியரசுத்தலைவர் பதவியை விட்டுக் கொடுக்கத் தயார் என அறிவித்தார். இதனால் யுவான் குடியரசுத்தலைவராகப் பொறுப்பேற்றார்.

டுங் மெங் ஹுய் என்ற புரட்சி இயக்கத்தை சுங் சியாவோ ஜென் என்பார் உதவியுடன் கோமின்டாங் என்ற அரசியல் கட்சியாக மாற்றியமைத்தார்.

1924ல் கூடிய கோமின்டாங் கட்சியின் முதல் மாநாட்டில் தமது சோவியத் ஆதரவு கொள்கையை அறிவித்தார்.

**சன் யாட் சென்னின் மறைவு**

1924ல் துவான் சி ஜுய் என்ற போர்த் தலைவர் அவர் ஒன்றுபட்ட சீனாவை உருவாக்குவதற்கு தேசிய மாநாடு கூட்டி அதற்கு சன் யாட் சென்னுக்கும் அழைப்பு விடுத்தார். உடல் நலமில்லாத நிலையிலும் சென் பீகிங் பயணம் மேற்கொண்டார். 1925ல் மரணமடைந்தார்.

# UNIT-II

## சீனாவும் முதல் உலகப் போரும்

முதல் உலகப் போரின் அடிப்படைக் காரணங்களுக்கும் சீனாவிற்கும் எந்தவித தொடர்புமில்லை. ஐரோப்பிய வல்லரசுகள் பரஸ்பரம், போட்டி, பொறாமை, பகைமை காரணமாக மூவர் கூட்டு (Triple Alliance) மூவர் நட்புறவு (Triple Entente) என்ற இரு இராணுவ முகாம்களாக பிரிந்து நின்றன. சரோஜிவோவில் வெடித்த துப்பாக்கி குண்டு வெடிமருந்து கிடங்கில் விழுந்த நெருப்பு பொறியானது ஐரோப்பாவில் 1914ல் போராக மூண்டது. அந்த ஐரோப்பிய வல்லரசுகள் தொலை தூரத்திலுள்ள கண்டத்தில் வாழ்வா, சாவா என்ற கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. எனவே அவற்றின் நிர்ப்பந்த நெருக்கங்களிலிருந்து சீனா தற்காலிகமாக விடுதலை பெற்றதுபோல் தோன்றியது. ஆனால் தூரக்கிழக்கின் வல்லரசான ஜப்பான் இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி சீனாவின் மீது தன் ஆதிக்கத்தை நிலைநாட்டத் திட்டமிட்டது. தனியே விடப்பட்ட சீனாவின் ஜப்பானின் ராஜதந்திர தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது.

**நடுநிலைப் பிரகடனம்**

போர் தொடங்கியதும் குடியரசுத் தலைவர் யுவான் ஷி கே சீனாவின் நடுநிலையைப் பிரகடனம் செய்தார். தம் நடுநிலையை கௌரவிக்குமாறு ஐரோப்பிய வல்லரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஜெர்மனி தவிர பிற வல்லரசுகள் அதற்கு சாதகமான பதில் தரவில்லை.

**ஜப்பானின் ஆக்கிரமிப்புகள்**

தூரக்கிழக்கில் தனி அதிகாரத்துடன் ஜப்பான் செயல்படத் தொடங்கியது. பசிபிக் கடலில் ஜெர்மனிக்கு சொந்தமான பகுதிகளை ஜப்பான் கைப்பற்றிக் கொண்டது. ஜப்பான் கைப்பற்றிய பகுதிகள் சீனாவின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும். தனது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டதைத் தவிர சீனாவால் எதுவும் செய்ய இயலவில்லை.

**இருபத்தியோரு அம்ச கோரிக்கை:**

இத்துடன் நில்லாது ஜப்பான் சீனாவின் மீது தன் மேலாதிக்கத்தை நிலைநாட்டும் நோக்குடன் இருபத்தியோரு அம்ச கோரிக்கையைத் தயாரித்து அதனை ஏற்குமாறு யுவானை நிர்பந்தித்து. இறுதியில் பலவற்றை ஏற்றுக் கொண்டு சிலவற்றிற்கான முடிவை தள்ளிவைத்தார். இந்நிலையில் மரணமடைந்தார்.

**போரிலிறங்குதல்:**

இதுவரை நடுநிலை வகித்த அமெரிக்கா 1917ல் போரிலிறங்கியது. தன்னைப் பின்பற்றி சீனாவும் போரிலிறங்க வேண்டுமென்று அறிவுறுத்தியது. உருப்படியான முடிவு எடுக்கும் உறுதியான தலைமை இப்போது சீனாவில் இல்லை. யுவான் ஷி கே இறந்ததும் லி யுவான் ஹங் குடியரசுத் தலைவரானார். துவான் சி ஜூய் என்ற படைத்தலைவர் பிரமராயிருந்தார்.. அவர் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்டகு ஆதரவாகப் போரிலிறங்கினால் அந்நாடுகளிடமிருந்து பண உதவி பெற்று தம் படை வலிமையை பெருக்கிக் கொண்டு பதவியையும் தக்க வைத்துக் கொள்ளலாம் என எதிர்பார்த்தார். ஆனால் சீன பொதுமக்கள் கருத்து ஜெர்மனிக்கு ஆதராவாக இருந்ததோ இல்லையோ பிரிட்டன், பிரான்சுக்கு ஆதரவாக இல்லவே இல்லை. இச்சூழ்நிலையில் மத்தியதரைக்கடலில் சென்று கொண்டிருந்த அதோஸ் என்ற கப்பலை ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் தாக்கி அழித்தன. அதில் பயணம் செய்த 543 சீனக்கூலிகள் உயிரிழந்தனர். இதனைக் காரணம் காட்டி பிரதமர் துவான், குடியரசுத் தலைவரையோ, பாராளுமன்றத்தையோ கலந்து கொள்ளாது 1917 மார்ச் 14ல் ஜெர்மனிக்கெதிராக போரிலிறங்கியிருப்பதாக அறிவித்தார். இதனால் போர் பிரபுக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு மோதல்களும் நிகழ்ந்தன. இறுதியில் போரிலிறங்கியது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**போரிலிறங்கியதன் விளைவுகள்:**

சீனா மிகப்பெரிய எதிர்பார்ப்புகளுடன் போரிலிறங்கியது. ஜெர்மன், ஆஸ்திரியாவிற்கு இன்னமும் கொடுக்கப்பட வேண்டிய பாக்சர் இழப்பீடுகள் தள்ளுபடி செய்யப்படும். இறக்குமதி, ஏற்றுமதி வரிவிதிப்பில் முழு சுதந்திரம் வழங்கப்படும். சீன மண்ணில் நிறுத்தப்பட்டுள்ள அன்னியப் படைகள் வெளியேற்றப்படும். ஆஸ்திரிய ஜெர்மன் சலுகைப் பகுதிகள் சீனாவிற்கு மீண்டும் கொடுக்கப்படும் என்றெல்லாம் எதிர்பார்த்தது. நேச நாடுகளின் கட்டுப்பாட்டிலுள்ள ரஷிய மஞ்சூரி இருப்புப் பாதையில் சீனாவிற்கு ஒரு பங்கு அளிக்கப்ட்டது. இரண்டாவதாக,

போருக்குப்பின் கூட்டப்படும் வெர்சேல்ஸ் அமைதி மாநாட்டில் சீனா பங்கு பெறும் வாய்ப்பினையும் பெற்றது.

**அமைதி மாநாட்டில் சீனா**

வெர்சேல்ஸ் அமைதி மாநாட்டிலும் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் சீனா கலந்து கொண்டது. ஷாண்டுங் தீபகற்பத்திலுள்ள ஜெர்மன் சலுகைகள் மீண்டும் தன்னிடம் ஒப்படைக்கப்படும் என்றும், சீனாவிலுள்ள வெளியார் படைகள் வெளியேற்றப்படும் என்றும், செல்வாக்குப் மண்டலங்கள் அகற்றப்படும் என்றும் எதிர்பார்த்தது.

1.சீனாவிலிருந்து இரண்டு தூதுக் குழுக்கள், ஒன்று பீகிங் அரசு சார்பிலும் மற்றொன்று காண்டன் அரசு சார்பிலும் வந்திருந்தன. இதில் அதிகாரப்பூர்வமான தூதுக்குழு எது என்ற நியாயமான சந்தேகம் எழுந்தது.

2.சீனாவின் கோரிக்கைகளுக்கு இணங்கினால் இங்கு தாங்கள் பெற்ற வணிகச் சலுகைகள் அகற்றப்பட்டுவிடும் என ஐரோப்பிய வல்லரசுகள் சந்தேகித்தன.

**விளைவு**

இதனால் சீனாவில் பெருங்கொந்தளிப்பு எற்பட்டது. தங்களின் நியாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டது கண்டு சீனர்கள் ஆத்திரமடைந்தனர். முதன்முதலாக சீனர்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து தேசிய உணர்வால் உந்தப்பட்டு கிளர்ந்தெழுந்தனர். இதில் பீகிங் பல்கலைக் கழக மாணவர்கள் முன்னணியில் நின்றனர். அவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டு வெளியேறினர். ஐரோப்பிய வல்லரசுகளுக்கு எதிராக தானாக பீறிட்டுக்கிளம்பிய இந்த ஆவேச உணர்வு ஜப்பானிய எதிர்ப்பு இயல்பாக மாறியது. ஜப்பானியப் பொருட்கள், ஆலைகள் புறக்கணிக்கப்பட்டன. இதுவே ‘‘மே நான்காம் நாள் இயக்கமென’’ வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேர்சேல்ஸ் மாநாட்டை விட்டு சீனா வெளியேறி ஜெர்மனியுடன் தனியாக அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டது. சமத்துவ நிலையில் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஜெர்மனி சீனாவில் தான் பெற்ற பிரதேசங்களையும் சலுகைகளையும் மீண்டும் சீனாவிற்கே வழங்கியது.

## மே நான்காம் நாள் இயக்கம்

முதல் உலகப் போரின் மிகப்பெரிய எதிர்பார்ப்புகளுடன் கலந்து கொண்ட சீனாவிற்கு மிகப்பெரிய ஏமாற்றங்களே காத்திருந்தன. வேர்சேல்ஸ் மாநாட்டில் சீனாவின் நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டது. புதிய கலாச்சார விழிப்புணர்ச்சியினால் எழுச்சியுற்ற சீன இளைஞர் சமுதாயம் ஆவேசத்துடன் கிளர்ந்தெழுந்தது அவர்கள் உள்ளத்தில் பெருக்கெடுத்து ஓடிய தேசிய உணர்வு மே நான்காம் நாள் அன்று எரிமலையென வெடித்தெழுந்தது.

**மே நான்காம் நாள் இயக்கத்தின் பின்னணி**

மஞ்சு மரபை வீழ்த்தி குடியரசை நிறுவிய சீனர்கள் வாழ்வில் மாற்றம் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. யுவான் ஷி கேயின் சுயநல ஆதிக்கமும், நாட்டின் நலனைப் புறக்கணித்துவிட்டு சொந்த நலன்களுக்காக சச்சரவுவிட்டுக் கொண்டிருந்த போர்த் தலைவர்களின் ஆதிக்கமும் வெறுப்பை அளித்தன. அரசு உயர் அலுவலர்களிடையே ஊழல்

மிகுந்திருந்தது. குடியானவர்களை வரிப்பளு வறுமைப் படுகுழியில் வீழ்த்தியது. நாட்டின் செல்வமும் நிலமும் ஒரு சிலா் கரங்களிலே குவிந்திருந்தன. எனவே நில பிரபுக்கள் மீதும் போா் பிரபுக்கள் மீதும் வல்லரசுகள் மீதும் இயல்பான ஆத்திரம் எழுந்தது.

ஆலைத் தொழில் தோற்றம் காரணமாக தொழிலாளா் வா்க்கம் தோன்றியது. குறைந்த கூலியில் கூதல் மணிநேரம் வேலை செய்தனா். பொதுவாக அவா்கள் வாழ்க்கைத்தரம் தாழ்நிலையிலிருந்து போா்க்களத்தில் ஐரோப்பாவிற்கு சென்ற சீன கூலிப் படையினா், அங்கு தொழிலாளா்கள் ஒருங்கிணைந்த அமைப்புகள் நிறுவி பல சலுகைகளைப் பெற்றிருப்பதைக் கண்ட அக்கூலித் தொழிலாளா்கள் மனதிலும் தொழிற் சங்க விழிப்புணா்வு தோன்றியது.

1917-ஆம் ஆண்டு ரஷியப் புரட்சி தொழிலாளா் வா்க்கத்தினரின் வலிமையை எடுத்துக்காட்டுவதாயிருந்தது.

பழமையான கன்பூசியஸ் தத்துவங்களை இனியும் நம்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை என கற்றறிந்த சீனா்கள் சற்று தாமதமாக உணரத் தொடங்கினா். அதன் விளைவாக அறிவியல் தொழில் நுட்ப அடிப்படையில் புதிய சமுதாயம் படைப்பதற்கு இலக்கியவாதிகள் துணை நின்றன. அவா்களுள் முக்கியமானவா்கள் ஹுஷி லுஷுன் ஆகியோராவா். அவா்கள் ஏழ்மை, அறியாமையில் மூழ்கிக்கிடந்த அா்த்தமற்ற பாரம்பரிய செயல்பாடுகளால் விறுவிறுப்பற்றுக் கிடந்த பண்டைய சீன சமுதாயத்தைச் சாடினா். இந்தப் புதிய இலக்கியம் ''புதிய பண்பாட்டு இயக்கமாக'' வளா்ச்சியுற்றது. சீரழிந்துக் கொண்டிருந்த சீனாவை சீரமைக்க இந்தப் பண்பாட்டு இயக்கம் பெரிதும் முயன்றது.

இத்தகைய அரசியல், சமூக, பொருளியல் கலாச்சார பின்னணியில் தான் மே நான்காம் நாள் எழுச்சி நடைபெற்றது. அதன் உடனடிக்காரணம் வொ்சேல்ஸ் மாநாட்டில் சீனாவிற்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றிய செய்திதான். ஷாண்டுங் தீபகற்பம் ஜொ்மன் செல்வாக்கு மண்டலமாகத் திகழ்ந்த போதிலும் அது சீன மண்ணின் ஒருங்கிணைந்த பகுதி. ஜொ்மன் மீது போா் தொடுப்பதாக கூறிக் கொண்டு ஜப்பான், ஷாண்டுங் தீபகற்பத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போருக்குப் பின் கூட்டப்படும் அமைதி மாநாட்டில் ஷாண்டுங் விஷயத்தில் சீனாவிற்கு இழைக்கப்பட்ட அநீதி அகற்றப்படும் என எதிா்ப்பாா்க்கப்பட்டது. ஆனால் ஏற்கனவே ஜப்பானின் ஆக்கிரமிப்பிற்கு வல்லரசுகள் இரகசியமாக அங்கீகாரமளித்துவிட்டன. எனவே **வொ்சேல்ஸ் மாநாட்டில் ஷாண்டுங் பற்றிய சீனாவின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. இந்த செய்திதான் மே நான்காம் நாள்** எழுச்சிக்கு உடனடிக் காரணமாயிற்று.

**எழுச்சியின் தொடக்கம்**

மே நான்காம் நாளன்று பீகிங் பல்கலைக் கழக மாணவா்கள் வகுப்புகளைப் புறக்கணித்து விட்டு வெளியேறி ஆா்ப்பாட்டம் நடத்தினா். அவா்களுடன் தொழிலாளா்களும் சோ்ந்து கொண்டு ஊா்வலமாகச் சென்றனா்.

நாட்டின் இறைமையைப் பாதுகாப்போம், துரோகிகளைத் தண்டிப்போம், ஜப்பானியப் பொருட்களைப் புறக்கணிப்போம் எனக் குரல் எழுப்பினா். இருபத்தியோரு அம்ச கோரிக்கையைத் திரும்பப் பெறவேண்டுமென்றும் வற்புறுத்தினா். அரசு அடக்குமுறைகளை ஏவியது. மாணவா்கள் கைது செய்யப்பட்டனா். தொழிலாளா்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனா். காண்டனில் உள்ள 20,000 ஆலைத் தொழிலாளா்கள் ஆா்ப்பாட்டம் செய்தனா்.

பல இடங்களில் கடைக்காரர்கள் கடையடைப்பு செய்தனர். இதனால் அச்சமுற்ற அரசு மாணவர்களை விடுதலை செய்தது. சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் பதவி விலகினர்.

**மே நான்காம் நாள் இயக்கத்தின் தன்மை**

மே நான்காம் நாள் இயக்கம் ஒரு அரசியல் எழுச்சியாகக் காணப்பட்ட போதிலும் அதற்கு உள்ளுணர்வு அளித்தவர்கள் புதிய இலக்கிய படைப்பாளர்கள் தாம். இதில் மாணவர்கள் மட்டுமல்ல, தொழிலாளர்களும், கடைக்காரர்களும் கலந்து கொண்டனர். இந்த வகையில் பார்த்தால் இரு வல்லரசுகளின் பொருளியல் சுரண்டலுக்கு எதிரான போரட்டமாகத் தோன்றுகிறது.

சுருங்கக் கூறின் மே நான்காம் நாள் இயக்கம் அரசியல் சமூக பொருளியல் விடுதலைக்கான நாட்டுப் பற்றுமிகு கலாச்சார இயக்கமாகும்.

**விளைவு**

புதிய சீனாவின் எழுச்சியை மே நான்காம் நாள் இயக்க வடிவில் கண்ட வல்லரசுகள் அதிர்ச்சியுற்றன. சீன மக்களின் நியாயமான கோரிக்கைகளை நீண்ட காலத்திற்கு நிறைவேற்றாது இருக்க முடியாது என எண்ணினர். இந்த நாட்டுப்பற்று கோபாவேசத்தை தணிக்க சீனாவிற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற முடிவிற்கு வந்தனர். ஆதன் விளைவுதான் வாஷிங்டன் மாநாடு.

## கோமின்டாங் கட்சி (1928-49)

1928-ல் சியாங்கே ஷேக் போர்த் தலைவர்களின் ஆதிக்கத்தை முற்றிலும் ஒழித்து கோமின்டாங் கட்சியின் ஆட்சியை நிலைநாட்டினார். அதன்பின் 20 ஆண்டு காலம் சீனாவை அக்கட்சிதான் ஆட்சி புரிந்தது.

**கோமின்டாங் கட்சியின் தோற்றம்**

1911-ஆம் ஆண்டு புரட்சியில் மஞ்சு மரபு ஆட்சியை வீழ்த்துவதில் முக்கியப் பங்கு பெற்ற துங் மெங் ஹுயின் தந்தையான டாக்டர் சன் யாட் சென் தான் கோமின்டாங் கட்சிக்கும் தந்தையாவார். எனினும் கோமின்டாங் கட்சியை ஒரு அரசியல் கட்சியாக உருவாக்குவதில் சங் சியோவோ ஜென் என்பார் முக்கியப் பங்கு பெற்றார். 1912-ல் தேசியப் பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் அக்கட்சி தனிப்பெருங்கட்சியாக விளங்கியது.

**சோவியத் ரஷியாவுடன் நட்பு**

காண்டன் அரசை மேற்கத்திய வல்லரசுகள் அங்கீகரிக்க மறுத்தன. 1917 புரட்சிக்குப் பின் ரஷியாவில் நிறுவப்பட்ட சோவியத் அரசுதான் காண்டன் அரசை அங்கீகரிக்க முன்வந்தது. டாக்டர் சன் யாட் சென் ரஷிய கம்யூனிஸ்ட் கட்சியைப் போல் தமது கோமின்டாங் கட்சியையும் கொள்கைப் பிடிப்புள்ள கட்டுப்பாடான கட்சியாக மாற்ற விரும்பினார். அதற்கு ரஷிய உதவியை நாடினார். ரஷியா, மைக்கேல் பொரோடின் என்பவரை சீனாவிற்கு அனுப்பியது. அவருடைய மேற்பார்வையில், கோமின்டாங் கட்சி சீரமைக்கப்பட்டது. கட்சிக்கென படைப்பிரிவும், பிரச்சாரக் குழுவும் உருவாக்கப்பட்டன. குட்சியின் செயல் திட்டங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற தேசிய கொள்கையோடு, சோஷலிச பொருளியல் கொள்கை. நிலச்சீர்திருத்தம், தொழிலாளர் முன்னேற்றம் போன்றவைகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

**கோமின்டாங் கட்சியின் முதல் மாநாடு (1924)**

கட்சியின் முதல் மாநாடு 1924ல் நடைபெற்றது. அம்மாநாட்டில் சென் தமது முப்பெரும் கொள்கைகளை (சான் மின் சூயி- தேசியம், ஜனநாயகம், மக்கள் நல்வாழ்வு) கட்சியின் கொள்கைகளாக அறிவித்தார். பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராகலாம் என்றும் அறிவித்தார். அதன் விளைவாக மூன்று நடைமுறைக் கொள்கைகளையும் அறிவித்தார். அவை

சோவியத் ரஷியாவுடன் கூட்டு, சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் கூட்டு, சீன தொழிலாளர் குடியானவர்களுக்கு ஆதரவு. ஆதனால் உட்கட்சி பூசல் இருந்து கொண்டிருந்தது.

## சியாங்கே ஷேக்

1925ல் சன்யாட்சென் பீகிங்கில் திடிரென மரணமடைந்தார். நாட்டை ஒன்றுபடுத்தும் பொறுப்பை தம் சீடர்களுக்கு விட்டுச் சென்றார். கோமின்டாங் கட்சி கூட்டுத் தலைமையின் கீழ் செயல்பட்டது.

மைக்கேல் பொரோடின் -ரஷிய ஆலோசகர்

வாங் சிங் வெய் - இடது சாரித் தலைவர்

சியாங் கேஷேக் - படைத்தலைவர்

இம்மூவருள் சியாங் கே ஷேக் இளைஞர். டாக்டர் சென் சியாங்கை சோவியத் படை அமைப்பு முறையை அறிந்துவர ரஷியா அனுப்பினார். நாடு திரும்பியதும் அவரை வாம்போவா படைப்பயிற்சி மைய தலைவராக்கினார். சென்னிண் மறைவிற்குப்பின் கோமின்டாங் கட்சியில் முப்பெரும் தலைவர்களுள் ஒருவரானதுடன் படைத்தலைவருமானார்.

**சீனாவை ஒன்றுபடுத்துதல்:**

அடுத்து சியாங் தமது தலைவர் விட்டுச் சென்ற கட்டளையை அதாவது சீனாவை ஒரே வலிய தேசிய அரசின் கீழ் கொண்டுவர வேண்டுமென்ற ஆணையை செயல்படுத்தினார். 1928 டிசம்பருக்குள் சீனாவின் அனைத்து மாநிலங்களும் கோமின்டாங் கட்சியின்கீழ் வந்தது. நாங்கிங் தலைநகரானது. இந்தப் புதிய அரசை பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா உட்பட 12 மேற்கத்திய நாடுகள் அங்கீகரித்தன. சன் யாட் சென்னின் முதல் கொள்கை ‘‘தேசியம்’’ நிறைவேற்றப்பட்டு விட்டது என சியாங் கே ஷேக் அறிவித்தார்.

**கட்சியில் பிளவு**

கோமின்டாங் கட்சியில் கம்யூனிஸ்ட் கட்சியினலை டாக்டர் சென் அனுமதித்தால் தொடக்கத்திலிருந்தே இடதுசாரி, வலது சாரி கோஷ்டிகள் இயங்கின. அவற்றையெல்லாம் சியாங் கோமின்டாங் கட்சியின் ஒரே தலைவரானார்.

**கோமின்டாங்-கம்யூனிஸ்டுகள் போராட்டம்**

1928ல் சீனாவில் சியாங் கே ஷேக் வலிமை வாய்ந்த எதிர்ப்பற்ற ஏகதலைவராக விளங்கினார். 1928-ல் சீன கம்யூனிஸ்ட் தலைமையில் மாற்றம் ஏற்பட்டது. இதுவரை தலைவராக இருந்த சென் து ஷியூ பதவி நீக்கம் செய்யப்பட்டார். மா சே துங் தலைமைப் பொறுப்பேற்றார். கம்யூனிஸ்டுகள் சீன சோவியத்துக்களை நிறுவி ஒரு அரசாங்கமே நடத்தி

வந்தனர். நிலப் பிரபுக்களிடமிருந்த நிலங்களைப் பறித்து குடியானவர்களுக்குப் பங்கிட்டளித்தனர். கூட்டுப்பண்ணை வேளாண்மையை ஊக்குவித்தனர். வரிப்பளுவைக் குறைத்தனர். தொழிலாளர்களின் சங்கங்கள் நிறுவிப் போராடி அதிக ஊதியம் பெறவும் பணிபுரிய நல்ல சூழ்நிலை ஏற்படவும் ஏற்பாடு செய்தனர். இதனால் இப்பகுதியில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு அதிகரித்தது. சீன செஞ்சேனை நிறுவப்பட்டது. மா சே துங் பெரும்பகுதியில் மக்கள் அரசை நிறுவி நிலச் சீர்திருத்தங்களை நிறைவேற்றி மக்கள படையான செஞ்சேனையை உருவாக்கி சீன மக்களின் புரட்சி அணியினரை நிலைநாட்டி மேலும் விரிவுபடுத்தினர்.

**நீண்ட அணிவகுப்பு பயணம்**

1927 லிருந்து 1930 வரை பல இடங்களில் பலமுறை கம்யூனிஸ்டுகள் கிளர்ச்சியிலிறங்கினர். கோமின்டாங் அரசம் அவற்றை ஒடுக்க தாக்குதல் தொடுத்தது. 1934ல் கோமின்டாங் அரசு மிகப்பெரிய அளவில் ராணுவ நடவடிக்கை எடுத்தது. கம்யூனிஸ்டுகளின் ஆட்சிப் பகுதியான கியாங்சி, யுன்னாண் காடுகளை சுற்றி வளைத்து அவர்களைக் கூண்டோடு ஒழிக்க முயன்றது. ஆனால் அவர்கள் கோமின்டாங் முற்றுகையை முறியடித்து வடக்கு நோக்கி அணிவகுத்துச் சென்றனர். இது தான் ‘‘நீண்ட அணி வகுப்பு பயணம்’’ என வரலாற்றில் சிறப்பிக்கப்படுகிறது. கோமின்டாங்குகளால் கம்யூனிஸ்டுகள் முற்றிலும் ஒடுக்க முடியவில்லை

**மஞ்சூரிய ஆக்கிரமிப்பு**

கோமின்டாங்குகள் இவ்வாறு சீனக் கம்யூனிஸ்டுகளை ஒழிக்கும் படை நடவடிக்கைகளில் ,டுபட்டுக் கொண்டிருக்கும்போது 1931-ல் ஜப்பான் மஞ்சூரியாவை ஆக்கிரமித்துக் கொண்டது. இந்த மஞ்சூரிய ஆக்கிரமிப்பு கோமின்டாங்குகளின் செல்வாக்கை கடுமையாகப் பாதித்தது. இந்த இக்கட்டான வேளையிலும் சியாங்கே ஷேக் அன்னிய ஆக்கிரமிப்பை அகற்றும் நடவடிக்கையைக் கைவிட்டு கம்யூனிஸ்டுகளின் தொல்லையை ஒழித்துக்கட்டுவதில்தான் தீவிரமாயிருந்தார்.

1933-ல் ஜப்பானியர்களுடன் டாங்கு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டார். இது ஜப்பானிய மஞ்சூரிய ஆக்கிரமிப்ரப மறைமுகமாக அங்கீகரிப்பது போலிருந்தது. ஆனால் கம்யூனிஸ்டுகளோ ஆக்கிரமிப்பை அகற்ற கோமின்டாங்குகளுடன் கூட்டணி அமைத்து போராட தயார் என்று அறிவித்தனர்.

இரு கட்சிகளும் மீண்டும் இணைந்து சீனப் புரட்சியில் ஒரு புதிய சகாப்தத்தை தொடங்கியிருக்கிறது என மாவோ அறிவித்தார்.

**சீன ஜப்பானியப் போர் (1937-45)**

தேசிய முன்னணி அமைப்பு நாடெங்கிலும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டது. ஆனால் ஜப்பான் இதனை விரும்பவில்லை. கம்யூனிஸ்டுகளுக்கும், கோமின்டாங்குகளுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தும் நோக்குடன் சில அறிப்பைபள் வெளியிட்டது. கம்யூனிசத்திற்கு எதிராக சியாங்குடன் கூட்டுச் சேர்ந்து போராடத் தயார் என அறிவித்தது. ஆனால் சியாங் அதற்கிணங்காது சீன கம்யூனிஸ்டுகளுடன் கூட்டுச் சேர்ந்து ஜப்பானியர்களுக்கு எதிராகப் போராடுவதில் உறுதியுடன் நின்றார். எனவே ஜப்பான் சீனா மீது போர்தொடுக்க தயாராகி அதற்கு தேவையான காரணம் ஒன்றியை தேடி நின்றது. 1937 ஜூலை 7-ம் நாள்

''லூர்கௌசியோ'' அல்லது ''மார்க்கோபோலோ பாலம்'' நிகழ்ச்சி அந்த சந்தர்ப்பத்தை அளித்தது. உடனே ஜப்பான் சீனா மீது பிரகடனம் செய்யா போரை தொடங்கியது.

**மீண்டும் கருத்து வேறுபாடு**

இப்போரில் தொடக்கத்தில் சீனா படுதோல்வியுற்றது. தலைநகர் நாங்கிங்கிலிருந்து ஹாங்கௌவிற்கும் பின்னர் சுங்கிற்கும் மாற்றப்பட்டது. இதற்கிடையில் கம்யூனிஸ்டுகளுக்கும் கோமின்டாங்குகளுக்குமிடையில் பழைய பொறாமை பகைமை மீண்டும் தலைதூக்கியது. இதன்பின் இருதரப்பாரும் மோதிக் கொண்டனர். குற்றச்சாட்டுகளும் எதிர் குற்றச்சாட்டுகளும் அள்ளிவிசப்பட்டன. கம்யூனிஸ்டுகளின் மக்கள் தொடர்பு நிறுவனங்களை கோமின்டாங்குகள் ஒடுக்கினர்.

**நேச நாடுகளின் தலைவர்களோடு சியாங்**

1941 டிசம்பர் 6ல் ஜப்பான் அமெரிக்காவின் பேர்ல் துறைமுகத்தை தாக்கி அழித்ததும் இரண்டாம் உலகப் போர் தூரக்கிழக்கிற்கும் விஸ்தரிக்கப்பட்டது. அவ்விரு தலைவர்களையும் கெய்ரோவில் சந்தித்துப் பேசினார். இதனால் சீனா வல்லரசு அந்தஸ்திற்கு உயர்ந்தது. தைவானில் கோமின்டாங் அரசு சியாங்கே ஷேக் தலைமையில் தொடர்ந்து நடைபெற்று வந்தது. 1969 வரை சீனாவின் குடியரசுத் தலைவர் என்ற பட்டத்தை சுமந்து கொண்டிருந்தார். அதன் பின் அவர் மகன் சியாங் சிங் குவோ தைவான் அதிபரானார். பொருளியல் ரீதியில் தைவான் வெகுவாய் முன்னேறிருந்தாலும் அரசியல் ரீதியில் அங்கீகாரம் இல்லாத நாடாகவே இருக்கிறது.

**திறனாய்வு**

சீனாவின் இருபதாண்டு கோமின்டாங் ஆட்சியின் வரலாறும் சியாங் கே ஷேக்கின் வரலாறும் வெவ்வேறானதல்ல. கோமின்டாங் கட்சியினுள்ளும் கோஷ்டிப் பூசல் இருந்தது. இரு ஆண்டுகளுக்குள் சீனா முழுவதையும் கோமின்டாங் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது அவரது முதல் சாதனை. சுங்கவரி விதிப்பில் சுதந்திரம் பெற்று முரணாண உடன்படிக்கைகளை முடிவிற்கு கொண்டு வந்தது. குத்தகைப் பகுதிகளைத் திருப்பி பெற்று எஞ்சியிருந்த வெளியார் ஆதிக்கத்தை முற்றிலும் அகற்றியது. அவரது இரண்டாவது சாதனை சன் யாட் சென்னிண் முதல் கொள்கையான ''தேசியம்'' என்பதை நிலைநாட்டியது அவரது மூன்றாவது சாதனை.

## உள்நாட்டுப் போர்(

இரண்டாம் உலகப் போர் முடிவுற்றது. ஜப்பான் நிபந்தனையற்ற சரணாகதி அடைந்தது. 1895லிருந்து அந்நாடு சீனாவிடமிருந்து கைப்பற்றிய அனைத்து பகதிகளையும் மீண்டும் சீனா பெற்றது. புதிதாக தொடங்கப்பட்ட ஐ.நா. சபையில் சீனா வல்லரசு அந்தஸ்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது பன்னாட்டு அரசியலில் சியாங்கின் செல்வாக்கு ஓங்கியது போல் தோன்றியது.

ஆனால் உள்நாட்டில் கம்யூனிஸ்டுகள் அவரைத் தொடர்ந்து எதிர்த்து வந்தனர். அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜார்ஜ் மார்ஷல் 1947ல் கம்யூனிஸ்ட்-கோமின்டாங்களுக்கு இடையிலுள்ள சச்சரவுகளை தீர்த்துவைக்க முயன்று தோல்வி கண்டார். எனவே அவ்விருவரிடையே உள்நாட்டுப் போர் மூண்டது. சியாங் அமெரிக்காவிடமிருந்து ஏராளமான

படை உதவி பெற்றும் கம்யூனிஸ்டுகளின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த இயலவில்லை. கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றனர்.

சியாங் சீனாவைவிட்டு வெளியேறி பர்மோசா (தைவான்) தீவிற்குச் சென்று 1949-ல் அங்கு தம் கோமின்டாங் அரசை நிறுவினார். சீனா மண்ணின் உண்மையான அரசு தம் அரசு தான் என்று அறிவித்தார். அமெரிக்கா மேற்கத்திய அரசுகள் சியாங்கே ஷேக்கின் அரசு தான் சீனாவின் உண்மையான அரசு எனத் தொடர்ந்து அங்கீகரித்து வந்தன. கம்யூனிஸ்டுகளின் பீகிங் அரசை அங்கீகரிக்கவில்லை. ஐ.நா. சபையிலும் சீனாவிற்குரிய இடத்தை கொமின்டாங் அரசுதான் தொடர்ந்து வகித்து வந்தது. 1971-ல் தான் கம்யூனிஸ்ட் சீனா ஐ.நா.வில் உறுப்பினரானது. தேசிய சீனா வெளியேற்றப்பட்டது.

## SOURCE:


தென்கிழக்கு ஆசிய நாடுகள் வரலாறு, நா.ஜெயபாலன்

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வரலாறு, ஜே.தர்மராஜ்

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வரலாறு, வேலாயுதம்

சீன-ஜப்பானிய வரலாறு, ஜே.தர்மராஜ்

சீன-ஜப்பானிய வரலாறு, நா.ஜெயபாலன்

சீன-ஜப்பானிய வரலாறு, ஜெ.தியாகராஜன்